# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் - டிசம்பர் 2022

ஆண்டு 3 ▲ இதழ் 03

விலை : 200 / -



# நீயும் நானும்

●

சில்லறை காசுகளை உண்டியலிலும்
உன்னனைப் பற்றிய நினைவுகளை
இதயத்திலும் சேமித்த பிறகு
எப்போதாவது ஒருமுறை
உடைக்கத்தான் நேர்கிறது.

●

நீ குலுங்கி சிரித்தாலும் சரி
சப்தமில்லாமல்
சலனமாய் சிரித்தாலும் சரி
நாரில்லாமல் – அந்த சிரிப்பில்
எனக்கு மட்டும்
ஒரு முழுப் பூ கட்டத் தெரியும்.

●

வயிற்று வலி என்று
டாக்டரிடம் போனேன்
பரிசோதித்துப் பார்த்து விட்டு
நீ தின்றது ஏதோ செரிக்கலை என்றார்
எப்படிச் சொல்வேன் நான் அவரிடம்
உன் புகைப்படத்தை
கிழித்து தின்றதை.

●

நாம் இருவரும்
சண்டை போட்டுக் கொண்டு
வெகு நாட்கள்
பேசாமல் இருக்கும் போது
யோசிக்கிறேன்
என்னிடம் நீயும்
உன்னிடம் நானும்
சண்டை போடாமல்
வேறு யாரிடம் போடுவது சண்டை.

**ஆயுதா**


# முத்தமிழ் கலசம்



இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் – டிசம்பர் 2022

ஆண்டு 3 ▲ இதழ் 03

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பான வாசகர்களுக்கு வணக்கம்!

இம்முறை எமது இதழ் குழந்தைகள் சிறப்பிதழாக மலர்ந்துள்ளது. உலகம் எங்கும் குழந்தைகள் தினக் கொண்டாட்டத்தை, கொண்டாட்ட ஏற்பாடுகளைக் காண முடிகிறது. கொண்டாடப் பட வேண்டிய குழந்தைகளை மிகவும் கண்காணிப்புடன் பாதுகாக்க வேண்டிய ஒரு சூழலுக்குள் தான் நாம் இருக்கிறோம்.பெண்குழந்தைகளை மட்டுமல்ல, ஆண் குழந்தைகளையும் கூட மிகுந்த அக்கறையுடனும் அவதானத்துடனும் பார்த்துக் கொள்ள வேண்டிய ஒரு நிலைக்கே நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறோம் என்பது நிதர்சனமான ஓர் உண்மையாகும். உண்மையில் மலர்க்குவியலான பாலகர்களைப் பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பும் பெற்றோருடையதாகும். அவர்கள் அருகில் இல்லாத பட்சத்தில் அப்பொறுப்பு பாதுகாவலர்களையே சாரும். பாலியல் துஷ்பிரயோகங்கள் குறிப்பிட்ட சிலரின் மிக நெருங்கிய உறவினர்களில் இருந்தே ஆரம்பிப்பதாகத் தரவுகள் சொல்கின்றன. அதனால் எந்நேரமும் விழிப்புணர்வுடன் இருப்பதன் மூலம் இதுபோன்ற குற்றச்செயல்களை தவிர்க்க முடியும். ஆகவே வருமுன் காப்போம். நாளைய தலைவர்களை பத்திரமாக பாதுகாப்போம். அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!

நன்றியும் நல்வாழ்த்துகளும்!

– சித்தி வ.ஃபிரா

ஆசிரியர்

# நியாயங்கள்

**புல்லாங்குழலன்**

தம்பி நீ வேலைக்குப் போகாம இன்றைக்கு எங்கே கிளம்பிட்டே

இன்று சேவல் சண்டை இருக்கும்மா.

இரண்டு ஐந்தறிவுப் பறவைகளை சண்டையிட வைத்து ஒன்றைக் கொன்று விடுவது தான்ரசிப்பா? பாவமப்பா

கோழிக் குழம்பு மட்டும் வைக்கிறியே, அது சரியா? இதெல்லாம் வழி வழி வந்ததம்மா?

சரிப்பா, நமக்கு வேண்டாமுன்னு தான் நான் சொல்றேன்.

நம்ம வேலையைப் பார்த்தோமா நாலு காசு சம்பாதிச்சமான்னு, நிம்மதியாவாழ்ந்தோமான்னு இருக்கணும்.

இரண்டு பேர் தெருவில் அடிச்சுக் கிட்டாக் கூட நாம தடுக்கிறோம். ஆனால் சேவல்களை மட்டும் ஊக்கப் படுத்தி சண்டை போட வைக்கிறோம். அவையும் தெரிந்தோ தெரியாமலோ ஒன்றை ஒன்று காயப்படுத்தி ஒன்று இறந்து விடுகிறது. பார்ப்பது பாவமில்லையா? இது தான் மனித நேயமா?

அப்போது வீட்டினுள் நுழைந்தார் சதாசிவம். அவர் கையில் ஒரு பை. அதில் கோழி கிளீன் செய்யப்பட்ட பொதி.. அதை அவர் தன் மனைவியிடம் கொடுத்து சீக்கிரம் குழம்பு வை. என்று சொல்லிவிட்டு வேகமாக வேறு வேலையாக வெளியில் சென்று விட்டார் அவர்.

மகன் தாயின் முகத்தைப் பார்த்தான்.

சரி சரி போய்வா. சீக்கிரம் வா. சாப்பாட்டுக்கு வந்திடு என்றாள் அவள்.

## சலங்கை பேசுமே!!

சன்னமான அமைதியும்
பேசுதே!
சல்லிவேரும் சாடலை
மொழியுதே!
சாத்திரமும் ஆத்திரத்தின்
விளிம்பில்!
சமுத்திரமும் பொங்கியே
எழுகிறதே!
நதிகளும் போர்
முழக்க மிடுதே!
சபையும் வருகிறதே
நாத்திகனும் வருகிறானே
ஆத்திகனும் மேலும்
ஆத்திரத்துடன்
வருகிறானே!
ஏனோ?
எம்மிடம் சாதி
சாதியை திணித்திட
வரும் கூட்டத்தை ஒழித்திட!

**ஸ்டெல்லாமேரி எம். ஜே**

# தின்பண்டம் தின்னும் குரங்குகள்

**சு. பிரவந்திகா**
சென்னை _ 600072



**பிரவந்திகாவுடன் தாத்தாவும் பாட்டியும்**

சென்னை புறநகர் பகுதியில உருவாகிக்கிட்டு இருக்கும் ஒரு நகரத்துல வசிக்கிற மக்களுக்கு ஒரே சிரமமா இருந்துச்சாம். என்ன சிரமம் தெரியுமா?

கடைகளிலிருந்து மக்கள் வாங் கிட்டு வருகிற தின்பண்டங்கள், பழங்கள், தேங்காய் இன்னும் சாப்பி டுற எந்தப் பொருளைக் கொண்டு வந்தாலும் குரங்கு குட்டிகள் வந்து பையோட பிடுங்கிட்டுப் போயிடு மாம். பாதுகாப்பாக மூடிக் கொண்டு வந்தாலும் குரங்குகள் எப்படியாவது கண்டுபிடிச்சு எடுத்துக்கும். சமயங் களில் வீட்டின் கதவைப் பூட்ட மறந்து விட்டால் வீட்டுக்குள்ளேயும் வந்து சாப்பிட எது இருக்கிறதோ அதைக் கொண்டு போயிடும்.

இதையெல்லாம் பொறுத்துப் பார்த்துக் கிட்டிருந்த மக்கள் ஒரு கூட்டம் போட்டு கலந்து பேசினாங்க. நாம தனித்தனியாகப் போய் வெளியே இருந்து பொருள்கள் வாங்கிட்டு வரும்பொழுதுதான் இந்தக் குரங்கு குட்டிகள் நம்மைத் தொல்லை பண்ணுதுங்க, இனிமேல் நாம பழங் கள், காய்கறிகள் வாங்கணும்னா நாலைந்து பேராகச் சேர்ந்து போவோம். தின்பண்டங்களை வீட்டிலேயே செய்து கொள்வோம். வீட்டுக் கதவுகளை நன் றாகப் பூட்டி வைப்போம். அப்போது குரங்கு குட்டிகளால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது என்று முடிவெடுத்து அதைச் செயல்படுத்தினர். இதனால் தின்பண்டம் விற்கும் கடையிலும் வியாபாரம் மிகவும் குறைந்தது.

இதனால் சாப்பிடத் தின்பண்டம் கிடைக்காதக் குரங்கு குட்டிகள் ஏமாற்றமாக அலைந்தன. வீட் டுக்கு வெளியே காக்காய்க்கு வைக்கும் சாப்பாட்டில் உள்ள தின்பண்டங் களை எடுத்துச் சாப்பிட ஆரம்பித் தன. இதைப் பார்த்த மக்கள் குட்டிக் குரங்குகளைக் குச்சியைக் கொண்டு விரட்டினர்.

ஒருநாள் "ச்சே இந்த மனிதர்கள் ஏன்தான் இப்படி இருக்காங்களோ தெரியலை.... நமக்கு பசிக்குது, நாம சாப்பிட்டோம். இவங்க ஏன் நம்மளைத் தொரத்திக்கிட்டே இருக்காங்க... நம்மால வயிறு நிறைய சரியா சாப்பிடக் கூட முடியலை" அப்படினு குரங்கு குட்டிகள் எல்லாம் தங்களுக்

குள்ளேயே பேசிக்கிட்டு இருந்தாங்களாம்

அப்ப அங்கே வந்தத் தலைவர் குரங்கு "அட, குட்டிகளா... கடவுள் நம்மைப் படைத்தது இந்தத் தின்பண்டங்கள் சாப்பிடுவதற்கு இல்லை. காய்கறிகள், பழங்கள், தேங் காய் இவைகளைத்தான் நாம் சாப்பிடணும். நீங்கள் மனிதர்கள் சாப்பிடும் தின்பண்டங்கள் எல்லாம் சாப்பிட்டால், உங்களுக்கும் மனிதர்களுக்கு வரும் நோய்கள் எல்லாம் வந்துவிடும். கவனமாக இருங்கள்" என்றது.

இதைக் கேட்ட குரங்கு குட்டிகள் "இம்ம்... சரி... சரி... நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்றன.

அம்மாவிடம் போன குரங்கு குட்டிகள் குரங்குத்தலைவர் சொன்னதை அம்மாவிடம் கூறின. குரங்கம்மாவும் "தலைவர் சொன்னால் சரியாக இருக்கும், நாமும் மனிதர்களை நிறையத் தொல்லை செய்து விட்டோம். நாம் நாளை ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, இனி இதுபோல் நடந்து கொள்ள மாட்டோம் என்று சொல்லி மன்னிப்பு கேட்போம். எல்லாமும் சரியாகிவிடும், ஆனால் ஒன்று... மீண்டும் இந்த மாதிரி தவறு செய்யக் கூடாது... சரியா" என்றது.

"சரிங்க அம்மா" என்ற குரங்கு குட்டிகள் அடுத்த நாள் காலையில் அம்மா சொன்னது போலவே காலை உணவை சாப்பிட்டப் பிறகு அனைத்து குரங்கு குட்டிகளும் ஒருத்தர் வீட்டுக்குப் போனதுங்க.

குரங்கு குட்டிகளைப் பார்த்ததும் அங்கே இருந்தவங்க குச்சி எடுத்து விரட்டி வந்தாங்க. அப்போது அநதக் குரங்கு குட்டிகள் அவர்களைப் பார்த்து "இல்லையில்லை... நாங்கள் உங்கள் தின்பண்டங்களை எடுக்க வரலை. உங்களிடம் மன்னிப்பு கேட்டு வந்திருக்கிறோம். நிறைய முறை உங்களை தொல்லை பண்ணிட்டோம், எங்களை மன்னிச்சிடுங்க" என்று ஒவ்வொரு வீட்டுக்கும் போய் மன்னிப்பு கேட்க ஆரம்பிச்சாங்க.

இதெல்லாம் பார்த்த மனிதர்கள் திரும்பவும் ஒரு கூட்டம் போட்டாங்க." அடடா, இந்தக் குரங்கு குட்டிகள் எல்லாம் வந்து மன்னிப்பு கேட்டு போயிடுச்சுங்க. அதனால அவங்களுக்குப் பிடிச்சது எதாவது பண்ணித் தரணும், எதாவது யோசனை சொல்லுங்க" ஒருத்தர் கேட்கவும் குரு என்கிற குட்டிப் பையன் எழுந்து "அந்தக் குரங்கு குட்டி களுக்கு தின்பண்டம் ரொம்ப பிடிச்சிருக்குல, அதனால காட்டுல விளையுற பழங்கள், காய்கறிகள் வைத்து நாம எதாவது செய்து அவைகளுக்கு விருந்து தரலாமா" என்று கேட்டான்.

அங்கிருந்த அனைவருக்கும் அந்த யோசனை பிடித்துப் போக ஒருநாள் வாழைப்பழ வறுவல், மாம்பழ ஜாம், பீட்ருட் அல்வா, தர்பூசணி சாறு, தேங்காய் என நிறையத் தின்பண்டங்கள் செய்தும், நிறைய பழவகைகளோடும், காய்கறிகளோடும் குரங்குகளுக்கு விருந்து தந்தாங்க. அதைச் சாப்பிட்டக் குரங்குகளுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

"இனிமேல் மாதம் ஒருநாள் உங்களுக்கு விருந்து தருகிறோம்" என்று மனிதர்கள் சொல்லவும், குரங்குகள் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து நன்றி சொல்லின. அன்று முதல் குரங்குகளும், மனிதர்களும் நட்பாகப் பழகினார்கள்.

# துளிப் பாக்கள்

1.
வானையும் மிஞ்சும்
உயிர்க்கு செய்யும் உதவி
மனிதம் வெல்லும்

2.
உடைந்த கண்ணாடி
மீண்டும் முழுமை பெறாது
காயமான இதயம்

3.
மலரின் வாசம்
சுவாசத்தில் மணமாய் வீசும்
மனிதன் நற்குணம்

4.
காகிதக் கப்பல்
கானல் நீரில் பயணம்
ஆடம்பர வாழ்வு

5.
குதிரைக்கு கடிவாளம்
கவனம் சிதறாமல் தடுக்க
ஒழுக்கமே வாழ்வு

6.
புறத்தில் அழகாக
அகத்தில் சிலரோ பொய்யாக
முகமூடி வாழ்க்கை

7.
ஒளியும் ஒலியும்
இரவில் பொழியும் மழை
வாழ்க்கை பாதை

**சா.நாகூர் பிச்சை**
(வாழ்வியல் கவி)
திண்டுக்கல்

## தன்முனைக் கவிதைகள்

நாள்தோறும் உதிக்கும்
சூரியனும், நிலாவும்
பூமிக்குத் தருகிறது
இலவசமாக வெளிச்சம்

****

அறிவைத் தரும்
அப்பாவின் அறிவுரை
எங்களை வழி நடத்தும்
அம்மாவின் அன்பு

**சு.பிரவந்திகா**

என்னை உறங்க வைக்க
பொம்மைக்கும் அவளே
தாயானாள் ..!
சமத்துவம் கற்றேன்
என் அன்னையிடம்..!

**நவீன் விஷ்வா த.சூ**

தன் நகலை
மண்ணில் தவழ விட்டான்.
கள்ளமில்லா மழலையின்
வடிவில் கடவுள்

**எஸ். ஐஸ்வர்யா**

பள்ளிக்கூடம் விட்டு
சிரிப்புடன் வரும் குழந்தைகள்
சிறகடித்துப் பறக்கும்
வண்ணப் பட்டாம்பூச்சிகள்

**ம.லாவண்யா**

துரத்தி ஓடும் மகள்
கொண்டாட்டமான வேளை
கையில் இருந்த பட்டாம்பூச்சியை
பறக்கவைத்து ரசிக்கிறாள்

மிதிவண்டி ஓட்டும் மகன்
இறங்கி வழிவிட
மெல்லப் போகும்
ஒரு மரவட்டைப் புழு

**ஆர் ஜவஹர் பிரேம்குமார்,**
பெரியகுளம்.

# புதுமை பெண்

பெண்ணாய் பிறந்திட
பெருந்தவம் செய்திடல் வேண்டும்
என சொல்லும்
திருவாய் தான்
பெண்ணாய் பிறப்பது
பெரும்பாவம் என்கிறது முரணாய்

வாயில் வரும்
வார்த்தைகளையெல்லாம்
பேசி விட முடியாது
அளந்து அறிந்து தான்
பேச முடியும்!
பேசும் பேச்சுகளில் கூட

பிடித்தமானவர்கள்
எல்லோரிடத்திலும்
உறவாடிட முடியாது
தேர்ந்தெடுத்த சிலரிடம்
தேவைக்கு ஏற்ப மட்டும்
பழகலாம் சுதந்திரம் என

ஆடை அணிகலன்கள்
ஒப்பனைகள் செய்வதில் கூட
விதிகள் உண்டு சரியாக
பின்பற்ற வில்லையெனில்
பக்க விளைவுகள் உண்டு!
கலாச்சாரத்தில்

கீழ்ப்படிதல் நலம்
வரம்பு மீறினால்
நரம்புகள் நசுக்கப்படலாம்
உத்திரவாதம் ஏதுமில்லை
குறிப்பாய் ஆண் வர்க்கமெனும்
ஆணாதிக்கத்திடம்

தடைகள் மீறி
ஒரு ஜான்சி ராணியாகவோ
வேலு நாச்சியாராகவோ
சொல் எடுத்து வாள் வீசினால்
விலக்கு பெறவோ
விடுதலை பெறவோ
ஆண் பெண் சமமென்ற
சமத்துவம் பெறவோ
சந்தர்ப்பங்கள்
சாத்தியங்கள் உண்டு
வாழ்க்கையென்ற வேள்வியில்

பாரதி கண்ட புதுமை
பெண்களாய் சிறை
கம்பிகளை உடைத்து
சமுகத்திற்கு பாடம் புகட்ட
இதில் எத்தனை பெண்களுக்கு
வாய்ப்புகளும் வெற்றிகளும்
கிட்டுமென்று இன்னும்
பொறுத்திருந்து பார்ப்போம்
புதியதோர் சரித்திரம்
படைக்கப்படும்
என்ற நம்பிக்கையில்

**மகிழை.சிவகார்த்தி**



# அறிவரசனுக்குக் கிடைத்தப் பாராட்டு

அன்புச்செல்வி சுப்புராஜூ
அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்
சென்னை

அன்பரசியும், தமிழரசனும் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள். அவர்கள் இருவரின் வீடுகளும் அருகருகே இருந்தன. இருவரும் நெருங்கிய நண்பர்களாக இணைபிரியாது இருந்தனர்.எங்கு சென்றாலும் ஒன்றாகச் சென்று வந்தனர்.

தமிழரசுவிடம் ஒரு பழக்கம் உண்டு. எனக்கு வசதி குறைவு, நான் எதைச் செய்தாலும் யாரும் பாராட்ட மாட்டார்கள் என்று சொல்லிக்கொண்டே இருப்பான். அவனது இந்தக் குணத்தை மாற்ற வேண்டும் என்று அவனது பெற்றோர்கள், ஆசிரியர்கள், அன்பரசி உள்பட பல நண்பர்களும் முயற்சி செய்து வருகின்றனர்.

ஒருநாள் அவர்களின் வகுப்பில் தமிழாசிரியர் " மாணவர்களே, காலாண்டு விடுமுறை வருகிறதல்லவா, அந்த விடுமுறையில் நீங்கள் பார்த்த இடங்களைக் கொண்டு 'சுற்றுலா' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி வாருங்கள்" என்றார்.

மாணவர்களும் மகிழ்ச்சியுடன் "சரிங்க ஐயா " என்றனர்.

பள்ளி முடிந்து தொடர் விடுமுறை என்பதால் அனைவரும் துள்ளிக் குதித்து வீட்டுக்கு ஓடினர். ஆனால் தமிழரசன் மிகவும் அமைதியாக நடந்து வந்தான். அதனைக் கண்ட அன்பரசி " என்னாச்சு தமிழ், ஏன் அமைதியாக வருகிறாய்" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை"

"பிறகு ஏன் அமைதியாக வருகிறாய், எங்கிட்டச் சொல்ல மாட்டியாடா"

“இல்லை அன்பு, இன்னைக்கு வகுப்புல ஆசிரியர் சொன்னதைக் கேட்ட தானே” தமிழரசன் கேட்டதும்

“ஆமாம், கட்டுரைதானே எழுதிடலாம் அறிவு, அதுக்கேன்டா இப்படி இருக்க...” அன்பரசி கேள்வியாய் அறிவரசனைப் பார்த்தாள்.

“நம்ம வகுப்பில் உள்ள சிலருக்கு வசதி அதிகம். அவங்களில் ஓரிருவர் வெளிநாட்டுக்கு சுற்றுலா போகும் அளவுக்கு வசதியானவர்கள். மற்றவர்கள் ஊட்டி, கொடைக்கானல் போன்ற மலைப்பிரதேசங்கள் ஏன் இமயமலையில் இருக்கும் சிம்லா, டார்ஜிலிங் கூட சுற்றுலா போவாங்க “ என்றான் அறிவரசன்.

“அதனால என்ன, அவங்க போயிட்டு வந்து அந்த அனுபவங்களைச் சொல்லும் போது, கேட்கும் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியா இருக்கும்... நல்லபடியாக போயிட்டு வரட்டும்” என்றாள் அன்பரசி.

“உனக்கு ஒன்னும் புரியலை, நாம் இங்கே பக்கத்தில் எதாவது ஊருக்குப் போயிட்டு வந்து எழுதுவோம். அவங்க இப்போதைக்கு நம்மால பார்க்க முடியாத இடத்தைப் பற்றி எழுதுவாங்க. அப்ப அவங்களுக்குத் தானே மதிப்பெண் அதிகம் கிடைக்கும் “ ஆதங்கமாய் கேட்டான் அறிவரசு.

“இல்லை அறிவரசு, நீ தவறாகப் புரிந்து கொண்டு உள்ளாய். உள்ளூரோ, வெளியூரோ, வெளிநாடோ எதுவாக இருந்தால் என்ன? நாம் எழுதுவதைப் பொறுத்துத்தானே மதிப்பெண் தருவார் ஆசிரியர்?” சமாதானமாகப் பேசினாள் அன்பரசி.

“ம்ம்ச்ச்... உனக்குப் புரியலை அன்பு, என்னால மற்றவர்களை விடத் தெளிவாக, நன்றாக எழுத முடியும். ஆனால் அவங்க நாம் திரைப்படத்தில் மட்டுமே பார்த்திருக்கிற நிறைய அழகான இடங்களைச் சுற்றிப் பார்த்திருப்பதால், அவங்க எழுதுவதற்குத்தான் மதிப்பெண் கிடைக்கும்”

“மதிப்பெண் வருவது எந்த இடம் பற்றி எழுதுகிறோம் என்பதில் இல்லை, எப்படி எழுதுகிறோம் என்பதில்தான் இருக்கிறது. நாம் சுற்றுலா சென்ற இடத்தின் சிறப்பையும், அங்கு பார்த்ததையும் பற்றி சுவையாக எழுதினால் நமக்கு நல்ல மதிப்பெண்கள் கிடைக்கும் அறிவு. நம்பிக்கையுடன் இருடா” அன்பரசி சொல்லவும், சரியென்று தலையாட்டினான் அறிவரசன்.

அதுபோலவே அவர்களின் ஊருக்கு அருகிலுள்ள அணை ஒன்றிற்கு சுற்றுலா சென்ற அன்பரசியும், அறிவரசனும் சிறுவர்களுக்கு பொழுதுபோக்க பூங்காக்கள், மிருகக்காட்சி சாலை, பூச்செடிகள், வண்ண

மலர்கள், பலவகையான மரங்கள், அவற்றில் நிறைந்திருக்கும் பறவைகள் இவைகளுடன் நீரைத் தேக்கி வைக்கவும், மின்சாரம் தயாரிக்கவும் உதவும் அணைக்கட்டின் அழகையும், பயனையும் பற்றி எழுதியக் கட்டுரை ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரின் பாராட்டையும் பெற்றது.

அன்று மாலை வீட்டுக்குத் திரும்பும் பொழுது மகிழ்ச்சியுடன் வந்த அறிவரசனைப் பார்த்துச் சிரித்த அன்பரசி " என்ன அறிவு மகிழ்ச்சியா" என்றாள்.

"ஆமாம் அன்பரசி"

"ஒன்று சொல்கிறேன், இப்போதாவது கேள் அறிவு. சமயங்களில் பாராட்டு கிடைக்கலைனா சிரமமா இருக்கும் இல்லையா, அதனால எதையும் நன்றாக செய்ய வேண்டும் என்று நினைத்துக் கவனமுடன் செய்தால் போதும். பாராட்டுக்காக செய்யாதே" என்றாள் அன்பரசி.

அன்பரசி சொன்னதைச் சிந்தித்தவாறே வீட்டுக்குச் சென்றான் அறிவரசன்.

## போதையும் வாதையும்.

போதை வாழ்க்கைக்கு உதவாத பாதை
போதை வாழ்வை வருத்திடும் வாதை
பேதைகளே முன்னெல்லாம் போதைக்கு அடிமையானாரே- இப்போ
மேதாவி பிள்ளைகளும் வலியவே மாட்டிக்கொள்கின்றனரே!

விளையும் பயிர்களை வேலியே மேய்ந்திட
விளையும் பாதிப்பை பாதிப்பேரும் உணர்வதில்லையே!
உங்கள் பெற்றோர்கள் உங்களை கவனித்ததுபோல்
உங்கள் பிள்ளைகளைப் பெற்றோர் நீங்கள் கவனியுங்கள்
மாற்றங்கள் உண்டெனில் மனம்விட்டு பேசுங்கள்
தனிமையே தவறுகள் எல்லாவற்றின் முதல் படி.

போதை தலைக்கேறினால் தாயும், சகோதரியுமே
அவனிற்கு விலைபொருளாய் தெரிய,
பெருங்குற்றங்களின் கூட்டமெலாம் அவனிற்கு
வேதமோதும் தேவராய் தெரிவரே!
காணும் பொருளெல்லாம் காசாக்க தோன்றும்
கடைசியில் அவனுக்கு கொலைகூட நீதியாய் தோன்றும்.

நாளைய நாட்டின் தூண் ஒவ்வொன்றும் இன்றே சரிகிறதே!
எதுவுமில்லா அவர்களின் எதிர்காலம் போதையோடு விரிகிறதே!
உணரத்தலைப்படுதல் ஒவ்வொருவர் பொறுப்பாகும்
உடனே இதை உணராவிட்டால் உலகமே நெருப்பாகும்.

**திருமதி.நீற்றா இராசலிங்கம்,** உடுவில்.

# றோணியோக்களின் வளர்ச்சி-05

றோணியோக்களின் வளர்ச்சி என்பது அன்றைய இலக்கியப் பிரியர்களின் இன்றியமையாத தேடலாகும். அதன் வெளிப்பாடு,வேகம் ஒரு நிலையில் நிறுத்தியுள்ளது. அது தான் அன்று றோணியோ யுகமான ஒரு காலம். சிறந்த நட்போடு சந்தோசங்களை தனதாக்கி அருமையான அழகிய நந்தவனம். அங்கே அழகிய கவிப்பூக்களை நுகர்ந்து மணம் பரப்பியது. அதனை நினைத்துப் பார்த்தால் சந்தோசமாக இருக்கின்றது.

அந்தவகையில், இன்று என் கரம் கிட்டிய றோணியோ 'நவசக்தி' ஆகும்.
இது 1985ஆம் ஆண்டு நிதானிதாஸனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. ''அடிமைக்கும் மடமைக்கும் எதிராக'' என்ற கோஷத்தோடு 04 இதழ்களைக் கண்டுள்ளது. என் கரம் எட்டியது 03 இதழ்களே ஆகும்.



அட்டைப்படம் சுமாராக இருக்கின்றது. நுகரும் முன் சில வரிகள்....

படைப்பாளர்களின் வளர்ச்சி ஒரு புறம் நீண்டு செல்ல மறு புறம் படிப்பு ஏடுகளும் நீண்டு கொண்டே செல்கிறன. அந்தவகையில் உங்களுக்கு முன் நவசக்தி.

சோர்ந்த கைகள் உயர்ந்தது
- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

ஒரு சவர்க்காரம் குளிக்கப் போகுது!, கலையன்பன்
- ரபீக்,

யுக விடியலொன்றுக்கு
- நிதானிதாஸன்,

தம்பி நீ!
- கலாபுத்திரன் ,

உன்னால் இன்றே!
- கலாநெஞ்சன் ஷாஜஹான்,

இவன் வறுமைக்கே!
- புரோட்வே ஹில்மி ,

*நவசக்தி-02*

விடாமல் கூவட்டும்
- வி.மைக்கல் கொலின்,

தேசத் தலைவர்களுக்காக!
- கவிநேசன் நவாஸ்,



இருண்ட நிகழ்வுகள் தயாரிப்பு
-அமீதா ,

சோர்ந்த கைகள் உயர்ந்தது
- பட்டுக்கோட்டை
கல்யாணசுந்தரம்,

விரிந்த நெருப்பில் விரியாத சிறகுகள்
- இப்னு அஸுமத்,

இலங்கையின் இனப் பிரச்சினை
- நிதானிதாஸன்,

ஏன்? ஏன்?
- எஸ்.ராம்ராஜ் ,

பொலிஸ்
-புரோட்வே ஹில்மி,

கண்ணீர் மாலை
- எம்.எம்.நஜ்முன் ஹுசைன்,

இன்னும் நீடிக்குமா?
- வாழைச்சேனை அமர்,

இடதுசாரி
- ஆசிரியர்

வாசகர் சக்தி
- கலாநெஞ்சன்,
வாழைச்சேனை அமீர்

அழுதது போதும் எழுத விடுங்கள்
- கலையன்பன் ரபீக் ,

அந்தநாள் ஞாபகம்
- பாலையூர் அஷ்ரபா,

வாழ்த்து மாலை
ஆனந்த ராகங்கள்
- அமீதா ,

வாழ்க்கையைப் பற்றி
- ஏ.எம்.எம். நஸீர் ,

சுயரூபம் தெரியும் வரை
- மெஹருன் நிஸா ரிஷாட் ,

நாம் செய்யும் பூஜை
- மூ.பாலசுப்ரமணியம்,

ஆகியோர்களின் படைப்புக்கள் நவசக்தியில் இடம்பெற்று மிகவும் சிறப்பாக அலங்கரித்திருக்கின்றன. எழுத்து தெளிவின்மை இருந்தும் வளர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்பு இவ்விதழிற்குள் இருந்துள்ளது.

ஆகவே, நவசக்தியுடைய ஆசிரியரை பாராட்டாமல் இருக்க முடியாது. நிதானிதாஸன் (இம்தியாஸ் ஏ ரஸ்ஸாக்) இன்று இலக்கியத்தில் காணவில்லை மீண்டும் வருவாரா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் உண்டு. எங்கிருந்தாலும் அவர் எழுத்துப் பணியை ஆரம்பிக்க வேண்டுமென்பது எமது பிரார்த்தனைகள்.

மீண்டும் ஒரு றோணியோவுடன் அடுத்த இதழில் சந்திப்போம்

எஸ்.யூ.கமர்ஜான்பீபீ,
(J.P) ஹுனுப்பிட்டிய, வத்தளை.
Srilanka pen club.

# இனிய வாழ்வியலுக்காய்...

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

இன்று நம்மில் பலர் இழந்து
தவிக்குமோர் பண்பென்றால் அதில்
மிகவும் முக்கியமானது நிதானம்
எனும் பண்பே.

நிதானமின்றி நிலை குலைந்து
போனவர்களின் பட்டியல் ஏராளம்..
எதிலும் அவசரம்..
எதிலும் படபடப்பு..
எதிலும் அளவுக்கதிக வேகமென்று
மனிதர்கள் நிதானத்தை இழந்து
தவிக்கும் பொழுதுகள் ஏராளம்..

நாமாய் ஒரு விடயத்தை கண்கூடாகப்
பார்த்து
அதனைத் தீர விசாரிக்காது அதற்கு
நாமே ஒரு தலைப்பை வைத்து
செய்தியை உருவாக்கி அதன் மீது
தவழ்ந்து கொண்டிருப்போம்
உண்மை என்னவென்று
அறியாமலேயே.

இறுதியில் அந்த விடயத்தில்
சந்தேகமும் கோபமும் தலைக்கேறும்
போது சுற்றியுள்ளவர்களையும்
அயலவர்களையும் மறந்து
பூகம்பமாய் வெடித்து விடுகிறது
நிதானம் தவறிய கோபமொன்று
எம்மிலிருந்து.

இப்படி நிதானத்தை இழந்து நாம்
கைசேதப்படும் நொடிகள் ஏராளம்.
கலங்கி நிற்கும் நொடிகள் ஏராளம்.
கண்ணீர் சிந்திய நொடிகள் ஏராளம்.

காரணம் என்ன?
எந்தவொரு விடயத்திலும்
நிதானமில்லை.
பொறுமை இல்லை.
அதனால் நிம்மதியான வாழ்க்கை
இல்லை.

நமக்கு நிதானமாய் போகும் வயது
இன்னும் வரவில்லையேயென
யாரேனும் தன்னைத் தேற்றிக்
கொண்டால் அவர்களைப் போல்
முட்டாள் வேறில்லை..
ஏனெனில் இங்கே நிதானம் என்பது
வயதைப் பொறுத்து வருவதில்லை.
பக்குவத்தை பொறுத்து வருகிறது.

ஆனால் எல்லோராலும் அதனை
மிக நுணுக்கமாக கடைப் பிடிக்க
முடியாதென்பது தான் இங்கே பெரும்
கவலை.

மனதைக் குடையும் கேள்வியும் கூட.

இருப்பினும் இதுவரை நம்மை விட்டும் கைவிட்டுப் போன இந்த நிதானத்தை இனிமேல் நாம் கடைப்பிடிப்பது எப்படி என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

யாரேனும் நம்மை தொந்தரவு செய்தாலோ, நம்மை கோபப்படுத்தும் விதத்தில் நடந்தாலோ, நம்மை புரிந்து கொள்ளாமல் விட்டாலோ, நம்மை பொய்ப்படுத்தினாலோ, நம்மை பார்த்து ஏளனமாக சிரித்தாலோ, நம்மைப் பற்றி அடுத்தவரிடம் தவறாக பேசினாலோ, நாம் செய்யாத ஒன்றை செய்ததாய் பழி சுமத்தினாலோ கட்டுக்கடங்கா கோபத்தை அவர்கள் மீது காட்டி அவர்களைத் திட்டி தீர்த்து அத்துடன் சட்டென அவ்விடத்தை விட்டும் நகர்வோராக நாம் ஒருபோதும் இருந்துவிடக் கூடாது.

யாரேனும் நம்மை புரிந்து கொள்ளாது நம் உணர்வுகளையும் நம் மனதையும் உடைத்து நொறுக்குகின்றார்களெனில் அவர்களுக்கு முடியுமானவரை உங்கள் நிலைமையை புரிய வையுங்கள்.

நிதானமாக எடுத்து சொல்லுங்கள். அவர்கள் புரிந்து கொள்ளும்படி அமைதியாய் பேசுங்கள். புரிந்து கொள்ளக் கூடிய ஒரு சிலர் புரிந்து கொள்வார்கள். புரியாதவர்களுக்கு ஒரு படிப்பினையாக சரி இருக்கலாம்.

ஆனால் பட்டென திட்டி சட்டென முகத்தை திருப்பிக் கொண்டு மட்டும் வந்து விடாதீர்கள். அப்படியாயிருந்தால் அவர்களுக்கும் நமக்கும் இடையில் எந்த வித்தியாசத்தையும் காண முடியாமல் போய்விடும்.

ஆதலால் தான் நிதானம் என்பது பொறுமையின் உற்ற சகோதரன் பொறுமையும் நிதானமும் இருக்கும் வரை ஒருவனை யாராலும் வீழ்த்த முடியாது.அவனே வீழ்வதாய் நினைத்தாலும் அது அவனை கை தூக்கி விடும் நிச்சயமாக.

ஆதலால் நிதானத்தை கடைப்பிடித்துப் பாருங்கள்! வாழ்வே உங்கள் வசப்படும்.

எளிது எளிது! வாழ்தல் எளிது!

இனிய வாழ்வியலுக்கான நேர்மறையான சிந்தனைகள் இனியும் இனிதாகத் தொடரும்.

# அடைக்கலம்

நுனிவிரல்களால்
பற்றிப்படர்கிறது சிறுகொடி

கிளையினூடே கூடு
கட்டியவாறு சிட்டுக்குருவி

சுற்றிலும் ஊர்கின்றன
பசியிலிருக்கும் எறும்புகள்

மரணிக்க விரும்பாத
முறிந்த மரமொன்று
உயிர்களை வேரோடு
இறுகப்பற்றிக்கொள்கிறது!

**ரகுநாத். வ**
மதுரை

# என்னைக் கவர்ந்த நூல்




நான் இதுவரை வாசித்த நூல்களில் மிக அண்மையில் வாசித்தது தான். மௌலவி நூஹ் மஹ்ழரி அவர்களுடைய ''சுவனம் நமது வீடுகளில்'' இது எத்தனை முறை வாசித்தாலும் அலுக்காத சலிக்காத புத்தகம் என்றுதான் சொல்ல வேண்டும். நான் ஏற்கனவே மூன்று முறை வாசித்தும் இன்னும் தாகம் தீரவில்லை. நான்காவது தடவையும் வாசிக்க வேண்டும் போல்தானுள்ளது.

சிறந்த மார்க்க அறிஞரும் சிந்தனையாளருமான எமது அயல் நாடான இந்தியாவைச்சேர்ந்த சகோ. மௌலவி முஹம்மத் நூஹ் மஹ்ழரி அவர்கள் அல்குர்ஆன் ஹதீஸின் ஒளியில் மிகவும் சுவாரஸ்யமாகவும் விறுவிறுப்பாகவும் எளிய மொழி நடையிலும் நூலை நகர்த்திச்செல்லும் பாணியானது நிச்சயமாக எல்லோரையும் கவரும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் இந்நூலானது 176 பக்கங்களையும் 14 தலைப்புக்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது 7 வது மீள்பதிப்பையும் தாண்டிச்செல்வதானது புத்தகத்தின் தரத்தைகோடுபோட்டுக்காட்டுகின்றன. அதிலும் குறிப்பாக 'முன்மாதிரி அப்பா', 'தாய் விலை மதிக்க முடியாதது', 'ஈருடல் ஓர் உயிர்' உறவுகளைப் பேணுதல் போன்ற தலைப்புகள் இதில் என்னை மிகவுமே கவர்ந்தவையாகவுள்ளன. இவை பார்ப்பதற்கு விறுவிறுப்பாக இருப்பது மட்டுமல்லாது சம்பவங்களை நேரில் காண்பது போலவும் நூலாசிரியர் கையாண்டுள்ள பாங்கானது புத்தகத்தை மேலும் மெருகூட்டுகின்றன.

அது மட்டுமல்லாது இவரின் எல்லா நூல்களுமே வாசிப்பில் விருப்பம் இல்லாதோர்களைக்கூட, வாசிக்கத் தூண்டும் அளவில் அமைந்திருப்பது நூலாசிரியருக்கேயுரிய தனிச்சிறப்பாகும். தனது குடும்பத்தையும் ஏனைய குடும்ப உறவுகளையும் சீரமைக்க வேண்டும் என்று நினைக்கின்ற ஒவ்வொருவரும் நிச்சயமாக இதனைப் படித்ததாக வேண்டும்.

அத்தோடு திருமணம் செய்த பின் வாசிப்பதை விடவும் திருமணம் செய்வதற்கு முன்னர் வாசிப்பதானது குடும்ப வாழ்க்கையை தான் எதிர்பார்த்தது போன்று திட்டமிட்டு சுவாரஸ்யமாகவும் சந்தோஷமாகவும் வாழ வழி வகுக்கும் என்பது திண்ணம்.

ஏனெனில் எம்மில் அநேகமானோர் வெறும் உடல் இச்சைக்காகவோ, இல்லா விட்டால் நபி வழி என்றோ அல்லது எல்லோரும் செய்கிறார்கள் என்றோதான் திருமணத்தைப் செய்கிறார் களே தவிர குடும்ப வாழ்வு அதன் யதார்த்தம், சந்தோஷம், பிள்ளைகளின் எதிர்காலம் என்றெல்லாம் சிந்திப்பதே யில்லை. அதனால்தான் இன்று நிறைய குடும்பங்கள் தடம் புரண்டு சீரழிந்து கொண்டிருக்கின்றன என்று தான் சொல்ல வேண்டும்.

மேலும் நூலாசிரியர் கணவனி னதும் மனைவியின தும் வகிபாகம் குடும்பத்தில் எப்படி யிருக்க வேண்டும் என்பதோடு விட்டுவிடாமல் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்வதனால் அவர்களுக்கிடையே விரிசல்கள் ஏற் படுகின்றன, அவற்றை எவ்வாறு நிவர்த்திப்பது என்றெல்லாம் ஒவ் வொன்றாக மிகவும் அழகாக படம் பிடித்துக் காட்டுவதானது உள்ளத் தைத் தொட்டுச் செல்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக தான் ‘படித்ததில் பிடித்தது ‘என பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கு மிடையிலான சில உண்மைச் சம்பவங்களை அதாவது பிள்ளைகள் பெற்றோரின் அன்பை, நெருக்கத்தை எவ்வாறு எதிர்பார்க்கிறார்கள், அவர்களோடு பெற்றார் எவ்வாறு நேரத்தைச் செலவழிப்பது, அது நிறைவேறாத போது அவர்கள் அடையும் ஏமாற்றம் போன்றவற்றை அவர் விவரிப்பதானது கண்களில் கண்ணீரை வரச்செய்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் சிறிய மகனொ ருவன் தான் சேர்த்து வைத்த 50 ரூபா பணத்துடன் தந்தையிடம் 50 ரூபாய் கடனாகக் கேட்கிறார். ஆரம்பத்தில் மறுத்த தந்தை பின்னர் கொடுக்கிறார். மகன் அந்த 100 ரூபாவை தந்தையிடம் நீட்டி இந்தப்பணத்தை எடுத்துக்கொண்டு என்னோடு ஒரு மணி நேரத்தைச் செலவிட முடியுமா என்று கேட்கும் நெகிழ்வான தருணமானது கல் நெஞ்சம் படைத்தவர்களைக்கூட கலங்க வைத்து விடும் என்பதில் சந்தேக மில்லை எனலாம்.

அந்த வகையில் ஒவ்வொரு பெற்றோரும் நிச்சயமாக இந்தப் புத்தகத்தை அவசியம் வாசித்தே ஆக வேண்டும். அப்போதுதான் எமது குடும்பங்கள் எதிர்காலத்தில் எமக்கு கண் குளிர்ச்சியாகவும் சுவனத் தோப்பாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை.

எம்.சி. மஹ்ஜூதா ஏ றஹ்மான்
ஒலுவில்.

## தன்முனைக் கவிதைகள்

கல்வி எனும் மந்திரத்தைக்
கவனமாகக் கற்றிடு
புது சொர்க்கம் படைக்கும்
வரமதை புத்தியில் ஏற்றிடு


●

உயரிய பண்புகளை
ஊட்டியே வளர்ப்போம்
உருவாகும் உன்னத சமுதாயம்
நாளை உலகையே ஆளும்

- வஃபீரா வஃபி

## ஊக்கத்தின் அவசியம்

ஊக்கத்தால் உயர்ந்து
பயனால் பெருமையடைந்து
அனுபவத்தால் ஆராய்ந்து
உந்து சக்தியே அதன் சொத்து
ஊக்கம் ! ஊக்கம் !
அது ஏற்படுத்தும் பல தாக்கம்
இதனால் வாழ்விற்கு ஏற்றம்
பூக்கும் பல மாற்றம்
இது  நன்மைக்கான தோற்றம்
முயலாமையே இதன் தேக்கம்
நுணுக்கமே இதற்கான ஆக்கம்
பொறுமையின்மையே
இதன் சீற்றம்
பொறுப்புடன் இருப்பதே நோக்கம்
இது நடந்தால் வெற்றி நம் வசம்
குறிக்கோளே இதன் வாசம்
இதுதான் வள்ளுவன் சொன்ன
ஊக்க மந்திரம்



**ம. குசன்**
ஐந்தாம் வகுப்பு
சென்னை

## இயற்கை

செயற்கையில்லா இயற்கை
கொடுக்கும் நல்நம்பிக்கை
இறைவனின் வரமே!
ஆருயிர் காக்கும் அறனே
பல்லுயிர் காக்கும் பொக்கிஷமே
பல அவதாரம் எடுக்கும் மாயமே
பச்சை நண்பனே!
பரவசமூட்டும் அதிசயமே
இயற்கையை காப்பது அவசியமே
இணைந்து வாழ்வது இனிமையே
இதை புரிந்தால்
நமக்கு புண்ணியமே!



**ம. லவன்**
ஐந்தாம் வகுப்பு
சென்னை









# வளர்ந்து வரும் ஆளுமை அறிமுகம்





## சு. பிரவந்திகா

சின்னஞ்சிறு வயதிலேயே தன் பன்முகத் திறமைகளால் இலக்கிய உலகை ஆக்கிரமித்து வரும் ஒரு குட்டி எழுத்தாளரும், இளங்கவியுமான குட்டி நட்சத்திரத்தைத் தான் இன்று எம் சஞ்சிகையில் அறிமுகப் படுத்தப் போகிறோம்.

சென்னை, பட்டாபிராமில் வசித்து வரும் சு.பிரவந்திகா நான்காம் வகுப்பு படித்து வருகிறார். இவரது பெற்றோர்கள் சு.விமலா, தி. சுரேஷ் கண்ணன் ஆவார்கள். இவரது கவித்திறன் மூன்றரை வயதில் வெளிப்பட்டுள்ளது. நாயன்மார்கள் நற்றமிழ் சங்கம் வழியாக நடைபெற்ற கவியரங்கம் ஒன்றில் அவருக்குத் தோன்றிய கவிதையைக் கூற, அதுவே இவரது முதல் கவிதையாக அமைந்தது. அம்மேடையிலேயே 'வரகளகவி' என்று பாராட்டும் கிடைக்கப் பெற்றார்.இவருக்குப் பிடித்த இலக்கிய வடிவங்கள் சிறார் கதைகள்,தன்முனைக் கவிதைகள் என்பனவாகும்.

தொடர்ந்து தமிழில் புதுக்கவிதைகளை எழுதி, கவியரங்களில் வாசித்து வந்த பிரவந்திகாவிற்கு பல அமைப்புகள் பாராட்டும் ஊக்கமும் தந்தன. அவ்வகையில் «கவிமலர்கள் பைந்தமிழ் சங்கம்» வழங்கிய «இளங்கவி» விருதினை பாடலாசிரியர் நிகரன் கரங்களால் பெற்றார். «கவிமலர்கள் 1130 கவிதைகளின் சங்கமம்» என்ற நூலிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன

பல சிறார் அமைப்புகளின் வாயிலாக

பன்னாட்டுக் குழந்தைகளுக்கும் கதை சொல்லி வரும் இவர், சிறுவர் கதைப் புத்தகங்களை விமர்சனமும் செய்து வருகிறார். இவர் எழுதிய நூல் விமர்சனங்கள் இணையதளங்களில் வெளிவந்து கொண்டுள்ளன.

தொடர்ந்து சிறுவர்களுக்கானக் கதைகளை எழுதத் துவங்கினார். உழவுக்கவிஞர் உமையவன் தொகுத்த 'அந்தியில் மலரும் மொட்டுகள்', புத்தக நண்பன் குழு தொகுத்த 'சுக்கா...புக்கா... முக்கா...' தொகுப்பு நூல்களில் இவரது கதைகள் வெளிவந்துள்ளன. எழுத்தாளர் அன்புச்செல்வி சுப்புராஜு தொகுத்த 'குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்' மற்றும் 'வாண்டுகள் சொன்ன கதைகள்' புத்தகங்களில் இவர் எழுதிய கதைகள் வெளிவந்துள்ளன. 'வெட்சி' இலக்கிய இதழில் இவரது கதை வெளிவந்துள்ளது. பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் 'தமிழ்நெஞ்சம்' இதழில் இவரது பல படைப்புகள் இடம் பெற்றுள்ளன. பல மின்னிதழ்களிலும் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. சு.பிரவந்திகா எழுதிய 'சிறகடிக்கும் பட்டாம்பூச்சி' என்னும் சிறுவர் கதைப் புத்தகம் 'லாலிபாப் சிறுவர் உலகம்' பதிப்பகம் வெளியீடாக வெளிவந்துள்ளது. மேலும் 'அம்மு சொன்ன கதைகள்' எனும் சிறுவர் கதைப் புத்தகம் நிகழ் மீடியா மற்றும் அகிலா பதிப்பகம் வாயிலாக வெளிவரவிருக்கிறது.

தன்முனைக் கவிதை வகைமையில் பேரார்வம் கொண்ட இவர் தனது ஏழு வயதிலிருந்து பல தன்முனைக் கவிதைகளையும் தொடர்ந்து எழுதி வருகிறார். பதினாறு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் மிக







இளம் வயதிலேயே தன்முனைக் கவிதைகள் எழுதிய முதல் குழந்தை என்ற சிறப்பும் பெற்றுள்ளார். 'மலர்கள் தீட்டிய வரைவுகள்' உலகசாதனை தன்முனைக் கவிதைகள் நூலிலும், மழலைகள் குறித்த 'இங்காவின் ஆலாபனைகள்' மற்றும் 'அரும்புகளின் ஊர்வலம்' நூல்களிலும் இவரது தன்முனைக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. தன்முனைக் கவிதை கவியரங்கம் ஒன்றிற்கு தலைமை தாங்கி நடத்தி



தந்துள்ளார். கவியரங்குகளிலும் தொடர்ந்து தன்முனைக் கவிதைகள் வாசித்து வருகிறார். தமிழாழிக்காட்சி - கனடா மற்றும் 'அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்' இணைந்து வழங்கும் 'பல்சுவைக்களம்' நிகழ்வில் பலமுறை பங்கேற்று தன் திறமைகளை வெளிக்காட்டி வந்திருக்கிறார். கவியரங்கம், கலையரங்கம் நிகழ்வுகளில் இணைத் தொகுப்பாளராகவும் பயணித்து வருகிறார்.

உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம், தன்முனைக் கவிதைகள் குழுமம், கவியுலகப் பூஞ்சோலை குழுமம், சர்வதேச தமிழாழி தொலைக்காட்சி _ கனடா, தமிழ் அமெரிக்கப் பேரவை, தன்முனைக் கவிதைகள் படைப்பாளர்கள் பேரவை, புத்தக நண்பன், லாலிபாப் சிறுவர் உலகம், அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் உள்ளிட்ட உலகளவிலான பல அமைப்புகளின் வாயிலாகக் கதைகள் சொல்வதிலும் , கவிதைகள் சொல்வதிலும் பல பரிசுகளைப் பெற்றுள்ள இவர் 'இளங்கவி', 'வளருங்கவி' விருது உள்ளிட்ட சில விருதுகளைப் பெற்றுள்ளார். பல உலக சாதனை நிகழ்வுகளிலும் பங்கேற்பாளராகவும் இடம் பெற்றுள்ள,அந்த பன்முகத் திறமைகள் கொண்ட இந்த இளங்கவியை முத்தமிழ் கலசம் சார்பாக நாமும் மனம் திறந்து வாழ்த்துகிறோம்.








# தற்கால பொருளாதார சூழலில் பள்ளி செல்லும் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

**நிலு டீன் பண்டாரவளை**

மனிதனை நடத்தைகளில் மேன்மை அடையச் செய்ய இன்றியமையாத கருவி கல்வியாகும் நடத்தைசார் நுட்பம் சார் விருத்தியின் ஊடாக மாணவர்களை சீர் பெறச் செய்யவும் சிறந்த ஆளுமை மிக்க சமுதாயத்தை உருவாக்கவும் கல்வியின் தேவைப்பாடு என்பது முக்கிய மானதாக உள்ளது

முன்னைய நிலைகளில் பல பிரதேசங்கள் இடையே உள்ள மாணவர்களின் இடையே ஏற்படும் வளப்பாய்ச்சல் வேறுபாட்டினால் மாணவர் களின் அடைவு மட்டங்களில் ஏற்ற இறக்கங்களை காணக் கூடியதாக இருப்பினும் இதனுடன் சேர்ந்து மாணவர்கள் தங்களது இலக்குகளை அடைவதில் பல பிரச்சினை களை எதிர் நோக்கிய வண்ணம் இருக்க அதில் புதிதாய் நமது நாட்டின் பொருளாதார சூழலும் இப்போதைய தலையாய காரணியாக விஸ்வரூபம் எடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

எல்லாத்தரப்பினரையும் தயவு தாட்சண்யமின்றி பாதித்திருக்கும் இந்த பொருளாதார நெருக்கடியானது பள்ளி சிறார்களையும்பாரபட்சம்பார்க்கவில்லை. காலை நேரத்தில் அவசர அவசரமாய் வீடு விட்டு புறப்படத்தயாராகுகையில் வீட்டில் சமைக்க தாமதமாகும் தருணங்களில் பெற்றோரால் வீதிக்கடைக்கு ஓடி வந்து வாங்கிப்போகும் காலை சிற்றுண்டிகளின் விலை தொட்டு அவர்களை வழியனுப்பி ஏற்றிவிடும் பேரூந்தின் கட்டணங்கள் வரையிலும் என்றுமில்லாத வகையில் விலையேற்றத்தை இம்முறை அவதானிக் கக்கூடியதாய் இருக்கிறது.

இது அரச ஊழியர்களை கொண்ட குடும்பங்கள் தொட்டு அன்றாடம் உழைத்து வாழ்வை நகர்த்தும் அத்தனைபேரையும் ஏதோ ஒருவகையில் இலகுவில் சரிசெய்யமுடியாத சுமைக்குள் இழுத்துச் சென்றிருக்கிறது.

என்ன பாடுபட்டாவது தம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காய் இவற்றையெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் தாங்கிக் கொண்டு, தொடர்ந்தும் பயணப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைய பெற்றோரிற்கு திணிக்கப்பட்டிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

வருமானம் பெறும் வழிகளில் எந்தவொரு அதிகரிப்பையும் காணவியலாத



சோகம், செலவுகளின் போதான கட்டுப்படுத்த முடியாத அதிகரிப்பு இவையெல்லாம் மிகுந்த மன உளைச்சலையும், வாழ்வின் மீதான எதிர்பார்ப்புகளின் நிச்சய மற்ற தன்மை யையும் நேரடியாய் குடும்பத் தின் மூத்தோர்களிடத்தும் மறை முகமாய் பள்ளி செல்லும் அவர்களின் பிள்ளைகளிடத்திலும் ஏற்படுத்தி யிருக்கிறது.

இந்த நெருக்கடிகளை சரி செய்ய ஏதோ ஒருவிதத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருக்க வேண்டிய தேவையை ஒவ்வோர் வீட்டிலும் ஏற்படுத்தியிருப்பதோடு, தம் பிள்ளை களோடு செலவிடும் நேரம் இன்னும் சுருங்கி அவர்களின் கற்றல் செயற் பாடுகளிலும் மந்த நிலையை எதிர் காலத்தில் தோற்றுவிக்கும் வாய்ப்பை அதிகரித்திருக்கிறது.

ஸ்திரமற்ற பொருளாதார பொறிமுறைகளின் வழி தொடர்ந்தும் இழக்கப்பட்டுக்கொண்டிருக்கும் வளங்கள், வருமானங்கள், புதிய முயற்சியாண்மைகள் யாவும் நாட்டின் ஒவ்வொருவர் தலையிலும் மேலதிக அழுத்தத்தை தந்து கொண்டே யிருக்கிறது.

உணவுப்பொருட்களின் விலையேற்றம் பள்ளிக்குழந்தைகளின் போஷாக்கு மட்டத்தை வெகுவாய் பாதித்திருப்பதை கண்கூடாகவே காணக்கிடைக்கிறது. இதன் காரண மாககல்வியில்நாட்டமின்மை,சோர்வு மற்றும் பாடசாலை வரவு குறையும் தன்மை என்பன அதிகரிக்கும் அபாயம் தோன்றியிருக்கிறது.

குறைந்த வருமானத்தை உடைய பெற்றோர்கள் தமது பிள்ளை களை வேலைக்கு அனுப்பி மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாத நிலை எமது சமூகத்தில் காணப் படுகிறது அது ஒரு புறமிருக்க பிள்ளைகளும் வீட்டின் பொருளா தார நிலையறிந்து தாமாகவே பாடசாலைக்கு வருவதை குறைத்துக் கொள்வதுடன், பொருள் மற்றும் பணமீட்டும் சட்டவிரோத நடவடிக்கை களின் வழியேயும் தூண்டப் படுகிறார்கள்.

கீழை தேசத்தின் தானியக் களஞ்சியமாக காணப்பட்ட எமது நாட்டில் இன்றைய நிலையானது நாட்டின் எதிர்கால தலைவராக உருவெடுக்க வேண்டிய மாணவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகி உள்ளது .அடுத்த வேளை உணவை பெற இயலாத நிலை இன்று உள்ளது நகர்ப்புறங்களிலும் இந்த நிலை எனின் அன்றாடங்காய்ச்சியாக வாழும் தோட்டத் தொழிலாளர்கள், சூழல் பற்றி சற்று சிந்திக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது. மாணவர்கள் உணவாக வெறும் சோறு பலா மூசு என்பவற்றை மாத்திரமே எடுத்த வாசகங்கள் நாமும் படித்திருக்கிறோம் அல்லவா பாடசாலை சமூகம் இலை கஞ்சி போசாக்கு வேலை திட்டங்கள் கொண்டு வரினும் அதுவும் எல்லா நிலையிலும் சாத்தியமற்றதாகவே உள்ளது என்பது கவலையானதொரு நிதர்சனம்.

இது ஒருபுறமிருக்க போக்கு வரத்து பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தோமானால் கட்டண அதிகரிப் பின் காரணமாக வருவாயை ஈட்ட முடியாத நிலையில் உள்ள மாணவர் களின் பெற்றோர்கள் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப இயலாத நிலை காரணமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ளது.

பிரச்சினைகளை இனங் கண்டு அவற்றை உரிய முறையில் தீர்க்க வேண்டிய பொறுப்பு நாட்டின்

அரசாங்கத்தையே சாரும் தனியே வருமானம் பெறும் வழிகளை மாத்திரம் சிந்தித்துக்கொண்டிருக்கும் நிர்வாக திறனற்ற தலைமைத்துவங்களின் ஆளுகையின் விளைவே நாம் இன்றளவிலும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்னல்களின் பெரும்பங்காகிப் போகிறது.

பொருளாதார வள சீரமைப்பை உரியமுறைகளில் ஏற்படுத்தி தன்னிறைவு கொள்ளவல்ல பொறிமுறைகளை உருவாக்கி நிலைபேண்தகு அபிவிருத்தியினை நோக்காக கொண்டு செயற்படவல்ல திறன்மிகு வளங்களின் கூட்டிணைவின்மூலமே இத்தகு நீண்ட கால பிரச்சினைகள் தீர்க்கவல்லதாக இருக்கும்.

எல்லா வகையிலும் ஆரோக்கியமான எதிர்காலமொன்றை இந்த பிள்ளைகளிற்காய் ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்புணர்வு என்றைக்கு உணரப்படுகிறதோ அப்போது தான் அது விருத்தியின் பாதைக்கு வித்திடும்.

கற்றுணர்வோம் -
கடைக்கொள்வோம் -
கண்மணிகளை
காத்திடுவோம்.

# பொறுமை கொள்

கலங்கிடாதே பெண்ணே
உன் அழகிய எண்ணங்களை அறியாது
நிறத்தை மட்டும் பார்த்து உன்னை
உதாசீனம் செய்வது கண்டு
கலங்கிடாதே

உன் நிறத்தை சாடி
உன்னை சமூகத்தில் ஒதுக்குவது
சில சண்டாளர்களே

உன் கரு விழிகள் பேசும் கதை
எல்லோருக்கும் புரியாது
அதைப் புரிந்தவன் உனக்கு
வாழ்வளிக்க ஒரு நாள் வரும் வரை
துவண்டிடாதே.

பெண்ணே நிறம்
உனக்கு எதிரியல்ல வெண்மேகங்கள்
வானில் உலாப் போவது மட்டும் தான்
கரு முகில்களே மழையைப் பொழிந்து
புவியைக் கண் குளிரச் செய்கின்றன
அது போலவே நீயும்

உனக்கென ஒருவன் இனிமேல்
பிறக்கப்போவதில்லை மனதின்
இருள்தனை நீக்கி மலரும் வாழ்வை
எண்ணிடு.

வெறுப்புகள் வேரூன்றி வேண்டாம்
மணவாழ்வென எண்ணிடாதே
உன் ஒழுக்கமும் பொறுமையும்
உன்வாழ்வை வளமாக்கும்
பொறுத்திரு பெண்ணே.

**கலேவெல லரீபா பதுர்தீன்**

## மழைத் திருவிழா

குயில்களின்
குரலிசை கேட்டு
மதி மயங்கிய வான்மேகம்

மெல்லத் தலையாட்டி,
மெல்லிசை ராகம் பாடி,
மகிழ்ச்சியில் வடித்த
கண்ணீர் துளிகள்

மழையாக உருமாறி
பூமி பிரதேசத்தை
உயிரூட்டி உசுப்புகின்றது
குளிரூட்டியும்
குளிப்பாட்டுகின்றது

**கவிரசிகன்**
மலேசியா

மருத்துவக் கட்டுரை



# கவசக்கி டிஸீஸ் எனப்படும் சிறுவர்களைத் தாக்கும் நோய்


Dr ஜலீலா முஸம்மில் MBBS / SL

ஆதார வைத்தியசாலை ஏறாவூர்


கவசக்கி டிசீஸ் எனப்படும் நோயானது மருத்துவ ரீதியாகக் கண்டறியப்பட்டு உடனடி நிவாரணம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு நோயாகும்.

முழுமையாகக் கண்டறியப்படாத கவசக்கி நோயானது மிகவும் பார தூரமான விளைவுகளை உருவாக்கக் கூடியது. முடியுரு நாடி வீங்குதல் (coronary artery anurysm) எனப்படும் உயிராபத்தைத் தரக்கூடிய விளைவை ஏற்படுத்தக் கூடியது.

நீண்ட காலமாக காணப்படும் காய்ச்சல் மற்றும் அடிப்படைக் காரணங்கள் எதுவுமற்ற தன்மை போன்றன முழுமையாகக் கண்டறியப் படாத கவசக்கி நோயாகக் (Incomplete Kawasaki disease) கருதப்படும். ஆரம்பத்திலேயே அந்த நோயை கண்டுபிடித்துக் கொள்வதும் அதற்குரிய புரதச் சிகிச்சை (intravenous immunoglobulin) வழங்கு வதும் இந்த நோயினாலான பாரதூர விளைவுகளை குறைத்து மரணங்களை தடுக்கிறது.


கவசக்கி டிசிஸ் எனப்படுவது நாடி நாளங்களின் அழற்சி(vasculitis), உடல் முழுவதும் ஏற்படும் கடித்தன்மை(purpura),இதய நோய்கள் போன்ற விளைவுகளைத் தரக்கூடிய சிறுவர்களில் ஏற்படும் நோயாகும்.இது பெரும்பாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே ஏற்படுகிறது.

கவசக்கி நோய் என்பது குருதிக் குழாய்களில் அழற்சியை ஏற்படுத்தும் சிறார்களில் ஏற்படும் ஒரு தன்னுடல் தாக்குநோய் (Autoimmune disease) ஆகும். இது பொதுவாக நடுத்தர அளவுடைய குருதிக் குழாய்களில், பிரத்தியேகமாக முடியுருக் குழாய் களில் ஏற்படுகிறது. இது குருதிக் குழாய்கள் மட்டுமன்றி தோல், சீதமென்சவ்வு, நிணநீர்க்கணுக்கள் ஆகியவற்றிலும் ஏற்படலாம். பெரும் பாலும் உயர் மற்றும் தொடர்ந்த காய்ச்சலை ஆரம்பத்தில் கொண்ட கவசக்கி நோய் பாரசிட்டமோல் அல்லது இப்யூபுரூஃபன் கொண்டு அளிக்கப்படும் சாதாரண சிகிச்சைக்கு மிகவும் பலனளிப்பது இல்லை.

உலகரீதியாகக் கருதுகையில் பெரும்பாலும் ஆசியச் சிறுவர் களையே அதிகம் தாக்குகிறது. 75% க்கும் அதிகமாக ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களையே பாதிக்கிறது. ஆறு மாதத்திற்கு குறைவான மற்றும் ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை தாக்குவது குறைவென்றாலும் இதயத்தின் பாதிப்பு அதிகமாக இவர்களுக்கு ஏற்படலாம்.

## நோய்க்கான காரணிகள்

கவசக்கி நோய்க்கான முக்கிய காரணம் இன்னும் அறியப்படவில்லை. இருப்பினும், இதற்கான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில மருத்துவர்கள் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தியின் பலவீனம் காரணமாக, இந்த நோய் ஏற்படுகின்றது என்று கூறுகிறார்கள். எனினும், இது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.




சில சந்தர்ப்பங்களில் இந்த நோய் மரபணு ரீதியாக ஏற்படுகின்றது.

ஒருவித வைரஸ் அல்லது பாக்டீரியாவின் தொற்று காரணமாகவும் ஏற்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் இது ரசாயன பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படுகின்றது.

பின்வரும் சில ஆபத்து காரணிகளும் நோயில் செல்வாக்கு செலுத்துகின்றன.

சிறுமிகளை விட இந்த நோய் சிறுவர்களுக்கு அதிகமாக ஏற்படும் ஆபத்துகள் உள்ளது.

குளிர் மற்றும் மழைக்காலங்களில், இந்தநோயின் ஆபத்து அதிகமாகிறது.

பெரும்பாலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் இது ஏற்படுகிறது.

ஆசிய கண்ட குழந்தைகளில் இந்த நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது.

இந்நோய்க்கான காரணம் இதுதான் என்று அறுதியிட்டு கூறமுடியாவிட்டாலும் சில வகையான வைரஸ்கள் மற்றும் பாக்டீரியா தாக்கத்துக்குப் பின் இந்நோய் தோன்ற வாய்ப்புள்ளது. அத்தோடு மரபணு ரீதியான காரணமே கூடுதலாக இந்நோய்க்கான பிரதான காரணியாகக் கூறப்படுகிறது.

## நோய்க்கான குணங்குறிகள்

1. ஐந்து நாட்களுக்கு கூடுதலாக காயும் காய்ச்சல்
2. விழிவெண்படலம் சிவந்து

போதல் (conjunctival injection)

3. உடல் பூராகவும் ஏற்படும் ஒரு வகையான கடி(Rash)
4. நாக்கு சிவந்து தடித்தல் (strawberry tongue) அதேபோன்று உதடுகள் சிவந்து வெடிக்கும் தன்மை
5. கைகளும் கால்களும் சிவந்து வீங்கிப் போகும் (stainless oedematous limbs)
6. கழுத்துப் பகுதி நிணநீர்க் கணுக்கள் வீங்குதல் (cervical lymphadenopathy)
7. பிள்ளைகள் எப்போதும் ஒரு வகையான எரிச்சலுடன் அழும் தன்மையோடு இருப்பார்கள் (irritability)
8. மூளைக்காய்ச்சலுக்கு உரிய குணங்குறிகளும் ஏற்படும்
9. வயிற்று வலி வாந்தி வயிற்று ஓட்டம்
10. மூட்டு வலிகள்
11. சிறுநீர் கழிக்கும்போது எரிவுத்தன்மை / அழுகை
12. பி சி ஜி ஊசி போட்ட இடத்தில் கூடுதலான சிவந்து தடித்ததன்மை ஏற்படுதல்

மனித உடலில் குருதியைக் கொண்டு செல்லும் நாடியில் காணப் படும் அழற்சியினால் இந்த நோய் ஏற்படுகின்றது. இந்த நோய் நடுத்தர அளவுள்ள நாடிகளை தாக்குகின்றது. அதனால் இதயத்திற்கு இரத்தத்தை கொண்டு செல்லும் நாடிகளில் வீக்கம் ஏற்படும்போது இதயத்திற்கு பாதிப்பு ஏற்படலாம். குழந்தைகளின் இதயத்தை பாதிக்கும் ஆபத்து அதிகமாக உள்ளது. எனவே இந்த நோய்க்கான அறிகுறிகள் தென் பட்டால் உடனடியாக சிறுவர் வைத்தியர் நிபுணரை நாட வேண்டும். சிகிச்சை களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## கண்டறிதல் (diagnosis)

இது பெரும்பாலும் குணங்குறி களின் அடிப்படையிலேயே கண்டறி யப்படுகிறது.

FBC CRP ESR RFT LFT ASOT BLOOD CULTURE போன்ற இரத்த பரிசோதனைகள் UFR URINE CULTURE போன்ற சிறுநீர்ப் பரிசோதனைகள் ECG ECHO

மேற்படி ஆய்வு கூடப் பரிசோத னைகள் மற்றும் நடைமுறைகள் கவசக்கி நோயைக் கண்டறியப் பயன் படுத்தப்படுகின்றன:

சிறுநீர் சோதனைகள் : சிறுநீரில் சோடியம் அல்லது புரதத்தை சோதிக்கவும்

இரத்தப் பரிசோதனைகள் : வெள்ளை இரத்த அணுக்களைக் கணக்கிட மற்றும் இரத்த சோகை இருப்பதை சரிபார்க்கவும்

இதயப்பட்டி மற்றும் எகோகார்டு யோகிராம் : கரோனரி (முடியுரு) அசா தாரணங்களை அடையாளம் காணவும்

கல்லீரல் செயல்பாடு சோதனை: கல்லீரல் வீக்கத்தை சோதிக்கவும் அவசியமாகிறது.

## நோய் நிவாரணம்

நாளங்களுக்குள் செலுத்தப்படக் கூடிய புரதம் (intravenous immunoglobulin)

ஆஸ்பிரின் Aspirin

கோட்டிகோஸ்டீரொய்ட்ஸ் corticosteroids

கவசக்கி நோயில், குழந்தைக்கு காய்ச்சல், மற்றும் தோலில் அழற்சி போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மருந்துகளை வழங்குவதன் மூலம் இதற்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த சிகிச்சையில் ஆஸ்பிரின் போன்ற சில மருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன,இதுஇரத்தம்உறைவதைத் தடுக்கிறது. மேலும், மருத்துவரைக் கேட்காமல் எந்த மருந்தையும் உட் கொள்ளக் கூடாதென்பது மிகவும் அவசியமாகும்.

சில சந்தர்ப்பங்களில் கார்டிகோஸ்டீ ராய்டு மருந்துகள் பரிந்துரைக்கப் படுகின்றன. இந்த மருந்தில் உடலை பாதிக்கும் ஹார்மோன்கள் மற்றும் ரசாயனங்கள் இருந்தாலும் மற்ற மருந்து கள் வேலை செய்யாதபோது இந்த மருந்து பொதுவாக வழங்கப்படுகிறது. கூடுதலாக, குழந்தைக்கு இதயம் தொடர் பான பிரச்சினைகள் இருந்தால், குழந் தைக்கு கார்டிகோஸ்டீராய்டு மருந்து வழங்கப்படுகின்றது.

இன்ட்ரெவனஸ் இம்யூனோகுளோ பூலின் மருந்து (ஐ.வி.ஐ.ஜி). இந்த மருந்து ஒரு ஊசி மூலம் நரம்பில் செலுத்தப்படுகிறது. கூடுதலாக, ஆன்ட்டி பயோட்டிக் வழங்கபடுகின்றன, இது நுண்ணுயிரிகள் மற்றும் பாக்டீரி

## ஹைக்கூ

அவளுடைய ஒப்பனை
பார்த்ததும் பிடிக்காமல் போனது
அவளின் மனது

அறுவடைக் காலம்
வயலில் இறங்க விடவில்லை
கடன் தந்தவன்

தமிழ்நெஞ்சம் அமின்



யாக்களிலிருந்து நோயெதிர்ப்பு மண்ட லத்தை பாதுகாக்கிறது. இந்த மருந்துகளைப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்கிய பிறகு, உண்டான அறிகுறிகள் 30 முதல் 36 மணி நேரத்திற்குள் குறையத் தொடங்குகின்றன.

36 மணி நேரத்திற்குப் பிறகும் குழந்தையிடம் எந்த முன்னேற்றமும் இல்லை என்றால், மருத்துவர் மற் றொரு டோஸ் கொடுக்கலாம்.

காய்ச்சலைப் போக்க குழந்தைக்கு ஆஸ்பிரின் மருந்து வழங்கப்படுகிறது, மேலும் இது ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் நோய் தொடர்பான அறிகுறிகளை குறைக்கிறது. இத யத்தை அடையும் இரத்த நாளங் களில் இரத்த உறைவைக் குறைக்க மருந்து வழங்கப்படுகிறது.

இந்நோய் பாதிப்பின் சதவிகிதம் 0.025% மட்டுமே என்பதும் மருத்து வம் மூலம் குணப்படுத்தக் கூடியது என்பதும் ஆறுதலான விஷயங்கள்.

இலங்கையில்பொதுவாகவருடத்தில் கவசக்கி நோயினால் பாதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை 50க்கும 100 க்கும் இடையில் காணப்படுகின்ற போதிலும் கொரோனா வைரஸ் தொற்றையடுத்து உலகில் குழந்தைகள் மத்தியில் இந்நோய் வேகமாக பரவும் தன்மை காணப்படுவதை தற்போது அவதானிக்கலாம்.

இந்த நிலையில், இந்தநோய்க்

கான அறிகுறிகள் தென்பட்டால் பெற்றோர் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். இந்த நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாத போதிலும் அவதானமாக இருக்க வேண்டும்.

சிகிச்சையளிக்கப்படாதபோது கவசக்கி நோய் பல சிக்கல்களை ஏற்படுத்திவிடும். கீழேகொடுக்கப் பட்டுள்ள பட்டியலானது சிகிச்சை யளிக்கப்படாதபோது கவசக்கி நோய் ஏற்படக்கூடிய சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளின் பட்டியலாகும் :

- அசாதாரண இதய துடிப்பு.
- இதய தசையில் வீக்கம்/அழற்சி
- இரத்த நாளங்களில் அழற்சி ஏற்படும்.
- கரோனரி ஆர்ட்ரி (Coronary artery) விரிவடைதல்.
- இதய வால்வுகள் சேதமடைதல்
- எலும்புகளில் பாதிப்பு.
- கண்ணின் உள்பகுதியில் பாதிப்பு.
- மூளையைச் சுற்றியுள்ள திசுக்களில் வீக்கம்
- குருதி நாள நெளிவு
- உள் இரத்தப்போக்கு
- மரணமடைதல்

கவசக்கி நோயைத் தடுக்க குறிப் பிட்ட தீர்வுகள் இன்னும் அறியப் படவில்லை. இது குறித்து ஆராய்ச்சி கள் நடந்து வருகின்றன. மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இந்த கவசக்கி நோயைப் பற்றிப் பெற்றோர் கூடிய கவனம் எடுத்துக் கொண்டு ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். எமது குழந்தைச் செல்வங்களை பாதுகாப்பதற் குரிய நடவடிக்கைகளை நாம் நிச்சயம் மேற்கொள்ள வேண்டும். நன்றி!

# வீட்டுக் குறிப்புகள்

❖ விக்கல் வந்தால் கழுத்தின் கீழ், கிடையாக உள்ள பிரச்சினைகளின் நீண்ட எலும்பின் நடுப்பாகத்தில் ஒரு பிளவிருக்கும்.அங்கு ஒரு விரலால் அழுத்தினால், விக்கல் உடனே நிற்கும்.

❖ தலைமுடி கொட்டும் சில இடங்களில் சொட்டை விழத் தொடங்கும். ஈரவெங்காயத்தை அரைத்து சாறெடுத்து தடவி, 3 அல்லது 4மணிநேரம் ஊறவிட்டு தலையைக் கழுவவேண்டும். வாரம் இருமுறை செய்து வர முடி வளரும்.

❖ எலுமிச்சம் தோலை தூக்கிப் போடாமல் பாத்திரம், கண்ணாடித் தம்ளர்,தட்டு, தேயிலை வடி,பீங்கான் கழுவும் தொட்டி போன்றவற்றை தேய்க்க பயன்படுத்துங்கள்! அவை பளிச்சென மாறுவதைக் காண்பீர்கள்.

❖ மாத்திரைகள் வரும் ப்ளாஸ்டிக் அட்டைகளை கத்தரிக்கோலால் வெட்ட வெட்டக் கத்தரிக்கோல் கூர்மையாகும்.

# பயனற்ற செயல்

- எஸ். ஐஸ்வர்யா

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தந்தை அவனைப் படிக்க வைக்கப் பல வகையில் முயன்றார். ஆனால் அவனோ படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இருந்தான்.

இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. அவன் கல்வி அறிவு இல்லாதவனாகவே வந்தான். இதனால் ஊர் மக்களும் உற்றார் உறவினர்களும் அவனைக் கேலியாகப் பேசினார்கள்.

இதைக் கேட்டு மனம் உடைந்த அவன் கடுந்தவம் புரிந்தாவது கல்வி அறிவு பெற்றுத் திரும்புவேன் என்று உறுதி செய்தான்.

காட்டிற்குச் சென்ற அவன் அங்கே தவத்தில் ஆழ்ந்தான். அருகே கங்கையாறு ஓடிக்கொண்டிருந்தது.

அவனுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டுமென்று நினைத்தான் இந்திரன். ஒரு முதிய அந்தணன் வடிவம் கொண்டு அவனிருக்கும் இடத்திற்கு வந்தான். பிறகு தன் கையால் மண்ணை அள்ளி அள்ளிக் கங்கையாற்றில் போட்டுக் கொண்டு இருந்தான்.

இதைக் கண்ட சிறுவன் “ஐயா எதற்காக இப்படி மண்ணை அள்ளி அள்ளிப் போடுகின்றீர் “ என்று கேட்டான்.

அதற்கு அந்தணன் “மனிதர்களும் விலங்குகளும் ஆற்றைக் கடப்பதற்கும் பாலம் கட்டுவதற்காகவும் மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறேன்” என்று பதில் தந்தான்.

“வெறும் மண்ணால் கங்கையில் பாலம் கட்ட முடியுமா நீங்கள் போடும் மண்ணை எல்லாம் தண்ணீர் அடித்துக் கொண்டு சென்றிருக்குமே முதியவரான நீர் அறிவில்லாத இந்தச் செயலைச் செய்யலாமா இனியாவது ஏதாவது பயனுள்ள செயலில் ஈடுபடுங்கள்” என்றான் அவன்.

அந்தணன் உண்மையான இந்திரன் ஆனான். “நீயும் என்னைப் போலப் பயனற்ற செயல்தான் செய்தாய். எழுத்துக்களைத் தெரிந்து கொள்ளாமலும் பாடம் படிக்காமலும் ஆசிரியரிடம் கேட்காமலும் வெறும் தவம் இருப்பதால் அறிவு கிடைக்காது. இன்னும் காலங் கடந்து விடவில்லை. நல்ல ஆசிரியரை நாடி முறைப்படிக் கல்வி கற்க செல். நீ சிறந்த அறிஞனாவாய்” என்று அவனை நோக்கிக் கூறிவிட்டு மறைந்தான்.

# குழந்தைகள் பாதுகாப்பும் பெற்றோரின் கடமைகளும்

லைலா அக்ஷியா
உளவியலாளர்

அந்தத் தந்தை தன் ஆறு வயது மகளை பாசத்தோடு வீட்டு வாயிலில் அவள் தலையை வாரிக் கொண்டிருந்ததைக் கண்டதும் எனக்கு அன்று கண்ணீர் மல்கியது. சந்தோஷமடையும் நேரத்தில் எதற்குக் கவலை? கவலைதான். நிச்சயம் காரணம் இருக்கிறது. அந்த குடும்பத்தில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் பின்னால் ஒரு கதையே இருக்கிறது.

அந்தப் பிள்ளை கூட பாடசாலைக்கு போக முடியாமல் இரண்டு கால்களிலும் மாக்கட்டுடன் நாற்காலியில் உட்கார்ந்து இருந்தாள். போதைக்கு அடிமையான அந்தத் தந்தை கடந்த சில வாரங்களாக சிறுநீரகம் பாதிக்கப்பட்டு அன்றுதான் வைத்தியசாலையில் இருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டு இருந்தார். ஏற்கனவே வீட்டில் வறுமை.தாய் எங்கெங்கோ வீட்டு வேலை செய்கிறாள். ஓரிரண்டு இடங்களில் யாசகம் கேட்டதாகவும் கண்டு சொன்னவர்களுமுண்டு. வெளியில் விளையாடிக் கொண்டிருந்த இந்தப்பிள்ளை அடுத்த வீட்டு மதிலில் அசட்டையாக கழற்றி, சாத்தி வைக்கப்பட்ட இரும்புக்கு கேட்டுக்கு மேலேறி தன்தாய் காயப் போட்ட துணிகளை எடுக்கப் போய், 'கேட்' மேலே சரிந்து, பிறகு எட்டுப் பேர் சேர்ந்து கனமான அந்தக் கேட்டை தூக்கித்தான் அதற்கடியில் விழுந்திருந்த பிள்ளையை வெளியில் எடுத்தனர். காதிலும் ,மூக்கிலும் இரத்தம் வடிந்து, கால்கள் முறிந்து இப்பொழுது வீட்டில். சாதாரணதரம் படிக்க வேண்டிய அவளது சகோதரன் கூட கல்வியை தொடர முடியாதவாறு நல்லவர்கள்,கெட்டவர்கள் தெரியாமல் நண்பர்களோடு சுற்றுகிறான். இது நான் கண்ட நேரடிக் காட்சி.

இது நமது வீட்டில் இல்லை. எங்கோ தான் நடக்கிறது என கடந்துவிட முடிய வில்லை. குழந்தைகளின் வாழ்க்கை அவர்களுக்கான உலகத்திலிருந்து பலாத் காரமாக பிடுங்கியெடுக்கப்பட்டு விடுகி றதா? அல்லது அவ்வாறாவதற்கு ஏதோ ஒரு காரணமாக பெற்றோர்களோ, சமூகமோ இருக்கிறதா? அந்தப் பிள்ளை களின் எதிர்காலம் என்ன? ஒரு பிள்ளைக் குத் தேவையான பாதுகாப்பு வழங்கப் பட வேண்டிய இடத்தில் அவர் களின் பாதுகாப்பு முற்றிலும் அழிக்கப்பட்டிருக்கிறதே.. கவலை தான்.

உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் பிள்ளைகள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சி னைகளின் போதெல்லாம் அவற்றைப் பற்றிய தலைப்புடன் நூற்றுக் கணக்கான ஆலோசனைகளும், விழிப்புணர்வுகளும் வந்து கொண்டு தானிருக்கின்றன. ஆனா லும் என்ன? ஒன்றை முடிக்க முயலும் போது இன்னொன்று அவர்களுக்கு சவாலாக அமைந்து விடுகிறது.

உலகில் சுமார் 1.9885 பில்லியன் குழந்தைகளில் துரதிஷ்டவசமாக மில்லி யன் கணக்கான குழந்தைகள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர் என்பதாக ஆய்வுகள் கூறுகிறன. முக்கியமாக குழந்தை கள் வன்முறை, துஷ்பிரயோகம், சுரண்டல், வறுமை,கொடுமை, பாதுகாப் பின்மை போன்ற சவால்களை எதிர்நோக்கு கின்றனர். உலகத்தை அலங்கரிக்கும் இந்தச் செல்வங்கள், எமது வீடுகளை நிறைத்திருக்கின்ற இவர்கள், எம் கண் முன்னாலிருக்கும் உயிர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு, இக்குழந்தைகள் இவ்வகையான ஏதாவதொரு அச்சத்துக்கு உட்பட்டிருக்கிறார்களா? என்பதனை தினமும் கூர்ந்து கவனிக்க வேண்டும். இந்தப் பொறுப்பு முக்கியமாக பெற்றோர்களிடமே இருக்கிறது.

ஒரு குழந்தை அன்பு, பாதுகாப்பு, ஆரோக்கியம், நல்ல உணவு, இயக்கம் சார்ந்த தேவைகள், மகிழ்ச்சியான சூழல்

போன்ற முக்கிய தேவைகளை கொண்ட தாக இருக்கும். இவற்றில் குறைகள் ஏற்படும்போது, சமநிலைகள் தவறி குழந்தைகளின் வாழ்க்கை கேள்விக் குறியாகி விடுகின்றது.

குழந்தைகளின் அடிப்படை உரிமை களான உயிர் வாழ்வதற்கான உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பங்கேற்பதற்கான உரிமை, பாதுகாப்பு உரிமை ஆகியவற் றில் பாதுகாப்பு உரிமை மிக முக்கியமா னதாகும். பாதுகாப்பென்பது குழந்தை களுக்கு எதிராக நடைபெறும் வன்முறை, சுரண்டல், தீங்கிழைத்தல், மற்றும் புறக் கணிப்பு ஆகியவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, ஆரோக்கியமாக உயிர் வாழவும் மற்றும் உடல், மன வளர்ச்சி பெற்று, தனித்தன்மையுடன்பாதுகாக்கப்படுவதுமாகும். ஒரு சிறந்த பெற்றோர்களாலேயே இவற்றை வழங்க முடிகிறது. பெற்றோர்களாக இருப்பவர்கள் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஆதரவாகவும், பாதுகாப்பாகவும் தாங்கள் இருக்கின்றோமா என உறுதி செய்து கொள்வது அவசியம். குழந்தைகளின் வாழ்க்கை யைச் சமாளிப் பது மிகவும் சிரமமாக இருந்தாலும், அவர் களது உடல், உள ஆரோக்கியத்தை பாது காப்பது முதன்மையான கடமையாக ஆகி விடுகின்றது. இதற்காக பின்வரும் சில வழிமுறைகள் பின்பற்றப்படுவது அவசியம்.

- பிள்ளைகளின் சுய திறன்களை, நல்ல மனநிலைகளை வளர்ப்பதற்காக பெற்றோர்களே ஒரு முன்மாதிரியாக இருத்தல்.
- நடத்தை மாற்றங்களை கவனித்துக் கொள்ள தகவல் தொடர்புகளை வெளிப்படையாகவும், நேர்மையாகவும் வைத்திருத்தல்.
- தெளிவான எல்லைகளை அமைத்தல்.
- அவர்கள் நேசிக்கப்படுகிறார்கள் என்பதனை அவர்களுக்கு வெளிப்படையாகவே தெரியப்படுத்தல்.
- நேர்மறையான கருத்து மற்றும் ஊக்கத்தை வழங்குதல்.
- மகிழ்ச்சியான இயக்கங்களை ஊக்குவித்தல்.
- அவர்கள் உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகளைப் பற்றி தொடர்ந்து பேசுதல்.
- முடிவெடுப்பதில் அவர்களை ஈடுபடுத்தல் ..

என இவ்வழிமுறைகளை பட்டியல் படுத்திக் கொண்டே போகலாம்

குழந்தைகளிடம் எதை எதிர்பார்க் கின்றோமோ அது எம்மாலும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதனை அவர்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள். ஒவ்வொரு பெற்றோரும் தமது வாழ்க்கை மட்டத்திலிருந்தே ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்திற்காக தம் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக இருப்பது முக்கியம். இது ஒரு சமூகத்தையே சிறப்பாக கட்டி எழுப்ப வித்திடுவதற்கு சமம்.

நேர்மறையாக சிந்தித்து அவர்களை வழிநடத்துவதுபோலவே,அவர்களுக்கேற்படும் உளப்பாதிப்புகள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். குழந்தைகளின் மன ஆரோக்கியத்தை கெடுக்கும் காரணங்கள் இருக்கின்றன.குழந்தையின் மன ஆரோக்கி யத்தை பாதிப்பனவாக பின் வருவன அமையலாம். தொடர்ச்சியான வறுமை,குடும்ப அழுத்தத்துடன் தொடர்புடைய சூழ்நிலைகள், துஷ்பிரயோகம் ,அல்லது நீண்டகால புறக்கணிப்பு, வீட்டு வன்முறை அல்லது பெற்றோரின் ஆரோக்கியமற்ற மனநலம், போதைப்பொருள் போன்றவை ஒரு குழந்தை யின் உளப் பிரச்சினைகளின் அபாயத்தை உயர்த்தக் கூடியவையாக இருக்கின்றன. இதேவேளை பெற்றோர் களாகிய நாமும் அவர்களது மன வலிமையை இல்லாமலாக்கும் சில தவறுகளை செய்து கொண்டுதான் இருக்கின்றோம் என்பதை அறிய வேண்டும். அவ்வாறு பெற்றோர்கள் மூலமாக நடைபெறும் சில தவறுகளில்:

- குழந்தையின் உணர்வுகளைக் அறிய முனையாதிருத்தல்.
- அவர்களை எப்போதும் தோல்வியில் இருந்து காப்பாற்றுவதற்காகவே பழக்கப்படுத்தல்.
- குழந்தைகளை எல்லா

விடயங்களிலும் மிகைப்படுத்துதல்.

- அதிகமான எதிர்பார்ப்பு.
- அவர்கள் எப்போதும் வசதியாக வாழ்வதற்கு இடமளித்தல் .
- அவர்களுக்கான எல்லைகளை அமைக்காதிருத்தல்.
- அவர்களை எல்லாவற்றிற்கும் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற உணர்வை கொடுத்தல்.
- அளவுக்கதிகமான பணப்புழக்கம் மற்றும் அவர்கள் தவறு செய்யும் எல்லா நேரங்களிலும் அவர்கள் வேண்டுகோளுக்கு சார்பாகவே நடந்து கொள்ளல்.
- பிள்ளைகளுக்கு பிறர் பொறுப்பு கூறுவதை தடுத்தல்.
- அவர்களை ஒப்பிட்டுப் பார்த்து வழிநடத்த முயற்சி செய்தல்.

என்பது போன்ற முக்கியமான தவறுகள் பெற்றோர்களால் ஏற்பட்டு, பிள்ளைகளுடைய நேர்த்தியான வளர்ச்சிக்கு அவர்களே முட்டுக் கட்டையாக இருந்து விடக்காரணம் ஆகின்றன.Most potential problems will not become mental health problems if we respond to them early."

நிச்சயமாக பிள்ளைகள் பற்றிய அதீத கவனம், அந்தப் பிள்ளை கர்ப்ப காலத்திலிருக்கும் போதே பெற்றோர்களுக்கு ஏற்பட்டு விட வேண்டும். எனவே பெற்றோர்கள் குழந்தை ஒன்றை பெற்றதோடு தனது கடமை முடிவடைந்து விட்டது என எண்ணாமல், அவர்கள் வாழ்க்கைக்கு தாங்களே பொறுப்புக்குரியவர்களாக இருக்கின்றார்கள் என்பதனை ஒவ்வொரு நிமிடமும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

''The best inheritance a parent can give his children is a few minutes of his time each day." -Q.A.Battisha

ஒரு பெற்றோர் தனது குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய மிகச்சிறந்த சொத்துழ ஒவ்வொரு நாளும் அவரது நேரத்தின் சில நிமிடங்களே.'' -O.A .Battisha

# ஓயாத அலைகள்

**கடல்**
**வற்றுவதும் இல்லை**

**கடல் நம்பி வாழ்பவர்**
**வாழ்வின்**
**கண்ணீரும்**
**மிச்சமில்லை**

**காற்றடித்தால்**
**பறக்கும் ஓலைக் குடிசைகள்!**
**கடல்**
**கொந்தளித்தால்**
**வீடுகள் எல்லாம்**
**சமுத்திரத்தில்**

**கடலில் வலை வீசினால்**
**மீன்கள் மாட்டும்**
**ஈழத்தில் மட்டும்**
**பிணங்கள் மாட்டும்**

**மாற்ற முடியவில்லை?**
**இன வெறியை**
**மறக்க முடியவில்லை**
**அவர்தம் வாழ்க்கை**
**நெறியை**

**கடலின்**
**அலைகள்**
**ஓய்வதும் இல்லை**
**ஓயாத அலைகள்**
**இருக்கும் வரையில் - இவர்கள்**
**ஓயப்போவதும் இல்லை**
**உறங்கப்போவதும் இல்லை.**

**ஈழபாரதி**

# வரவேண்டும் விடியல்

நவீன யுகத்திலின்று
நாளும்பல இன்னல்கள்
நச்சு மனம் கொண்ட மானிடரால்
பல குழப்பங்கள்

சின்னச்சிட்டுகளை
குறிவைக்கும் அம்புகள்
வண்ண மலரதனைச்
சிதைத்திடும் வம்புகள்

பச்சிளம் பாலகரை ஈன்றவள்
வீசிடும் அவலங்கள்
துச்சமென குழந்தை உயிரை
பலியெடுக்கும் கொடூரங்கள்

சின்னக் கண்மணிகளை
சின்னாபின்னமாக்கும் சித்திரவதைகள்
அன்பைத் தேடி அலைபாயும்
சிறுவரின் கண்ணீர்க் கதைகள்

போதையூட்டிப் பாதை
மாற்றும் வேதனைகள்
தீதைத் தூண்டி மூளைச்சலவை
செய்யும் துயரங்கள்

விழிதிறக்க வேண்டும்
சமூகத் தலைமைகள்
விடைதேட வேண்டும் சிறுவர்
பாதுகாப்பு நிலைமைகள்

சின்னக் குழந்தைகளின்
வண்ணக்கனவுகளைச் சிதைத்துச்
செல்கின்றதிந்தப் பொழுதுகள்

திரும்பும் திசையெங்கும்
காமுகக்கண்கள்
அரும்பும் துளிர்களை
பலியெடுக்கக் காத்திருக்கும்

வேலிகளும் பயிரை மேய்வதனால்
வேதனைகளே தொடர
இந்தச் சின்னக்கிளிகள்
சிறகடித்துப் பறந்திட முடியாமல்
சிறையிருக்கின்றனவே!

கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்கும்
நிலை ஒவ்வொரு பெற்றோருக்கும்
வயிற்றில் நெருப்பைச் சுமந்து கழியும்
ஒவ்வொரு நொடியும் பிள்ளைகள்
வாசல் வந்து சேரும் வரை

நாளைய தலைவர்கள்
இன்று நசுக்கப்படுகிறார்கள்
இன்றைய தலைவர்கள் விடியலைத் தருவரோ

**ரஹீமா மிஸ்பான்**

## அகதியின் ஏக்கம்

ஈழத்தில் பிறந்தோம்
வெளிநாட்டில் வளர்ந்தோம்
நினைவுகள் கூட
நிம்மதியில்லாமல்போனது
கனவுகளும் கண்ணீரில்
கலைந்து போகின்றது
அனாதையானோம் இன்று
அகதிகள் ஆனோம்..!!!

உறவுகளே எங்களை
இடம் பெயர்ந்தவன்
என்று சொல்லுங்கள்
அகதி என்று சொல்லாதீர்கள்
மனது வலிக்கிறது...

ரெஜி வாஷிங்டன்




# நூல் மதிப்புரை

தொழில் ரீதியாக வைத்தியத் துறையை தேர்ந்தெடுத்திருந்தாலும், இலக்கியத் துறையிலும் தனக்கென ஒரு பாதையை உருவாக்கித் தடம் பதிக்கும் கவிஞர் (டொக்டர்) ஜலீலாவின் முதல் படைப்பான 'சிறகு முளைத்த மீன்' இலக்கிய உலகில் வெற்றிகரமாகப் பறக்கத் தொடங்கியிருக்கிறது. பன்முகத் திறமைகளை தன்னகத்தே கொண்டு மிளிரும் இவரின் எழுத்தாற்றல் வியக்க வைக்கிறது என்று சொன்னால் மிகையில்லை. இவரின் நேர்த்தியான மொழியாளுமை மலைப்பைத் தருவதோடு, வார்த்தைப் பிரயோகங்கள் வியக்க வைப்பதைக் காண முடிகிறது.மேலும், நேர்த்தியான சீர்களின் அணிகள் கவிதையின் அழகுக்கு மெருகூட்டிச் செல்வதைக் காணலாம்.

இவரின் கவிதைகளோடு மனம் ஒன்றி லயிக்கலாம் வாருங்கள்!

இறையைப் போற்றி தன் முதல் கவிதையை ஆரம்பிக்கும் நம் கவிஞர், வரிசையாய் எடுத்துக் கொண்ட பாடுபொருள்களோ ஏராளம். எல்லாக் கவிதைகளும் கவிநயம் சொட்டச் சொட்ட மனதை ஈர்த்துச் செல்வதை உணரலாம்

'ஆலம் விதையாக விழுந்தீர் ஆசானே' எனும் கவிதையில், 'ஞான ஒளி ஏற்றும் தீபங்கள் நீங்கள்' எனும் ஒற்றை வரியை மொத்த வரிகளின் மகுடமாக அமைத்துப் பாராட்டினைக் கற்றையாக அள்ளிக் கொள்கிறார் இக்கவிஞர்.

நேயம்' எனும் கவிதை இயற்கையும் ஏனைய உயிரினங்களும் ஒன்றுபட்டு வாழ்ந்திருக்க,மனுக்குலத்தில் உதித்த ஒரு சாரார் மட்டும் பேதங்களில் ஊறிப் போய் பிரிவினைகளில் புதைந்திருப்பதை சொல்லாமல் சொல்ல, உண்மை சுருக்கென இதயத்தை குத்திச் செல்கிறது.

'பெருஞ்சிறை' எனும் ஒரு நீள்கவிதை நெஞ்சமதை கொள்ளை கொண்டது.
'பெருவெள்ளத் துயர் கட்டும் அணையாக, ஒரு குறுஞ்சிரிப்பு துணையாக, ஒற்றை விரல் மட்டும் இணையாக,விழிவழியே ஓராயிரம் கதைகள் பேச தனியாக, அமைதியான சுனையாக அல்லது அலையாக ஆர்ப்பரித்தேனும் வருவாயா? கனமழையாய் கவிதைகள் பொழிய காரணமாய் அமைவாயா' தனிமையின் ஏக்கம் இங்கு பெருஞ்சுமையாய் விரிய, இவ்வரிகள் உருப்பெற்றனவோ?

'பிரியமுடன்' என்றொரு கவிதை, நட்பின் மகத்துவமாய், பள்ளிக்கால பசுமை நினைவுகளில் திளைத்து இப்படிச் சொல்கிறது 'நட்பே! உன் முயற்சிகள் சறுக்கலாம். உன் விடாமுயற்சிகள் ஒருபோதும் தோற்றதில்லை.
இடியா மனதுடன் நீ விடியா இரவுகளோடு போராடினால் உன் சோலைவனத்தில் சோபிதம் துளிர்க்கும்' எனும் காத்திரமான வரிகள் நிச்சயமாய் மனதுக்குள் வலுவேற்றும்.

'மா.....ரணம்' கவிதையோ மரணத்தைச் சுவைக்காத மானுடரில்லையென சொன்னது. 'பாமரனும் படித்தவனும் ஏழையும் பணக்காரனும் பாரினில் யார் தப்பினார் கூற்றுவனின் குரங்குப் பிடியில்' நகைச்சுவையோடு மரணமென்ற நிதர்சனம் மனச்சுவரைத் தட்டிப் போகிறது.

'தேவதையும் மகளும்' சிறப்பாக ஒப்பிடப் பட்டு
'செல்லப் பிடிவாதத்தில் சொக்கும் தேவதை
கன்னக்குழியில் என்னை வீழ்த்தும் கவிதை'
அழகியலை அள்ளிச் சுமந்து வந்த வரிகளிவை.

இவரின் ஹைக்கூ கவிதைகள்,அந்தாதிக் கவிதைகள்,தன்முனைக் கவிதைகள்,சென்றியூக்கள் என்பனவும் இந்நூலில் இடம்பெற்றிருக்கின்றன.

தன்முனையில் இரு கவிதைகள் என் நெஞ்சம் தொட்டுச் சென்றன.

'கடலலையாய் முத்தமிட்டுச் செல்கிறாய் நிலமாக உன்னோடு சங்கமிக்கிறேன்'

'விரல் கொண்டு மூடினாலும்
இசையாய் வெளிப்படுகிறேன்
உன்னிதயப் புல்லாங்குழலுக்குள்
நுழைந்த காற்று நான்'

இன்னிசையாய் இதயம் நுழைந்த வரிகளிவை.

இப்படியாய் பல்வேறு எண்பத்தைந்து தலைப்புகளில் அசத்துகிறார் கவிஞர் ஜலீலா. இதில் எதை எடுப்பது,எதை விடுவதென எனக்குள்ளொரு போராட்டமாக, கண்மூடி சில கவிதைகள் கொய்திருக்கிறேன். இக்கவி நந்தவனத்தில் உலாப்போகும் வாசகர்களுக்கு இனிய தென்றலாய், நறுமணம் வீசும் மலர்களாய் பல கவிதைகள் உங்களுக்கு நவரசத்தோடு நல் விருந்தும் படைக்கும். உங்கள் சோகங்களைத் துடைக்கும். இந்த 'சிறகு முளைத்த மீன்' இலக்கிய உலகில் நெடுந்தூரம் பறக்கும்.

**வஃபீரா வஃபி**

## வேறுபட்டு நிற்கின்றோம்

காலம் கரைந்திட்டாலும்
நீ தந்த காயங்களின்
வலி இன்னும் எனக்குள் மாறாமலேயே
என் நினைவலைகளில்
அலைமோதிக் கொண்டிருக்க,
மலரும் மொட்டுக்கள் அத்தனையும்

பூக்களாவதும் இல்லை
காய்த்துக் கனியாவதும் இல்லை
அது போன்றே நம் காதலும்
இன்று இரு தண்டவாளங்களில்
பிரிந்து போன ரயில் போலே
நீயும் நானும் தூரமாகி
வேறு பட்டு நிற்கின்றோம்.

**ஃபாயிஷா ஷஸ்மாஹ்**
கொழும்பு



# பாம்புகளை உண்ணும் கீரிப் பிள்ளைகளை ஏன் விஷம் தாக்குவதில்லை?

முதலில் கீரியின் பலம், அது தன் எதிரியை எதிர்கொள்ளும் விதம், சண்டையிடும் திறமை, மற்றும் வெற்றிக்கான சூத்திரம் போன்றவை எப்படி அமைகின்றன என பார்க்கலாம்.

கீரியின் சண்டையிடும் திறமை மற்றும் வெற்றிக்கான சூத்திரம் என்பவற்றை ஆராய்ந்து பார்த்தோமேயானால்

- கீரிகள் பாம்புகளை விட வேகமாக இயங்குகின்றன.
- கீரிகள் பாம்புகளை விட உடல் ரீதியாக வலிமை மிக்கவை.
- அவற்றின் கூரான பற்கள் மற்றும் வலுவான தாடைகள் ஒரு நாகப்பாம்பின் தலையை நசுக்கும் அல்லது அதன் முதுகெலும்புகளை நொறுக்கும் தன்மை கொண்டவை.
- பாம்பு கீரி சண்டையிடுகையில் நீங்கள் உற்றுக் கவனித்தால், கீரி எப்போதும் பாம்பின் கழுத்தை தான் பிடிக்க முற்படும் என்பது புலப்படும்.
- ஏனெனில், நாகத்தின் கழுத்தில் அதன் பிடி இறுகுகையில் பாம்பு உதவியற்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் போகிறது.
- அதேசமயம், கீரி பாம்பின் வால் பகுதியை கடிக்க முயன்றால், பாம்பு கீரியைக் கடித்து சேதப்படுத்த முடியும்.
- முதலில், பாம்பினை சீண்டிச் சீண்டி அதனை களைப்படைய வைக்கிறது கீரி.
- பாம்பு கீரியை தீண்ட முற்படும் போது கீரி வேகமாக செயல்பட்டு எளிதாகத் தப்பிக்கிறது.
- கீரியின் வேகத்துக்கு பாம்பினால் ஈடுகொடுக்க முடியாமல் குழம்பி திணறும்.
- அவ்வேளையில் கீரி மின்னல் வேகத்தில் பாம்பின் தலையை தனது கூரான பற்களால் கடித்து குதற பாம்பு செயலற்று இறக்கிறது.
- நாகத்தின் நரம்பு மண்டலத்தின் முக்கிய தமனிகள் அதன் கழுத்தில் அமைந்துள்ளன.
- கீரி அதன் கூர்மையான பற்களைப் பயன்படுத்தி பாம்பின் தமனிகளை வெட்டி இதனால் பக்கவாதம் ஏற்பட்டு பாம்பு இறக்கிறது.

பாம்பின் நச்சுத்தன்மை எவ்வகையானதென சற்று பார்ப்போம்.

- நாகப்பாம்புகளின் விஷ நச்சுத்தன்மை நியூரோடாக்சின் (Neurotoxin).
- நியூரோடாக்சின்கள் என்பது நரம்பு மண்டலத்திற்கு விஷமான ரசாயன பொருட்கள்.
- நியூரான்களுக்கு இடையில் அனுப்பப்படும் வேதியியல் சமிக்ஞைகளை (நரம்பியல் கடத்திகள்) சீர்குலைப்பதன் மூலம் நியூரோடாக்சின்கள் செயல்படும்.
- அதாவது, விஷம் நேரிடையாக நரம்பு மண்டலத்தை தாக்க கூடியது.
- நியூரோடாக்சின்கள் தசை முடக்குதலை ஏற்படுத்துகின்றன, இது சுவாசக் கஷ்டம் மற்றும் மரணத்திற்கும் காரணமாக இருக்கலாம்.
- பாம்பு விஷத்தில் பொதுவாகக் காணப்படும் மூலப்பொருள், ஆல்பா-நியூரோடாக்சின் (alpha-neurotoxin) தசை செல்களின் மேற்பரப்பில் உள்ள அசிடைல்கொலின் ஏற்பி மூலக்கூறுகளுடன் (acetylcholine receptor) தன்னை இணைப்பதன் மூலம் செயல்படுகிறது.
- இந்த ஏற்பிகள் நரம்புகளிலிருந்து செய்திகளைப் பெற வடிவமைக்கப்பட்டுள்ளன, அவை தசைகள் சுருங்க அல்லது ஓய்வெடுக்கச் சொல்கின்றன.
- ஆனால், ஆல்பா-நியூரோடாக்சின் செய்திகளைத் தடுக்கிறது, செயலிழந்து இறுதியில் பக்கவாதத்தை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டவரைக் கொல்கிறது.

பாம்பு கடித்த சில நிமிடங்களில் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள்:

- உணர்வின்மை
- நினைவாற்றல் இழப்பு
- பார்வை மங்குதல்
- தலைவலி
- வாந்தி உணர்வு
- மயக்கம்

சரியான முதலுதவி சிகிச்சை எடுக்காவிட்டால் இறுதியாக, கடிபட்டவர் மயங்கி சுயநினைவை இழந்து பக்கவாதம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது.

கீரியிடமுள்ள விசேட விஷ முறிவானது யாதென பார்த்தால் ...

- கீரி இயற்கையாகவே உடலில் சிறப்பு அசிடைல்கொலின் ஏற்பிகளைக் (acetylcholinereceptor) கொண்டுள்ளது.
- அசிடைல்கொலின் ஏற்பி என்பது மூளைக்கும் தசைகளுக்கும் இடையிலான ஒரு முக்கிய இணைப்பாகும்.
- ஒரு கீரியின் அசிடைல்கொலின் ஏற்பி, நாகப்பாம்பின் நியூரோடாக்சினுக்கு எதிரான, நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது
- ஒரு நாகப்பாம்பு அல்லது வேறேனும் நியூரோடாக்ஸின் நஞ்சு கொண்ட ஜந்துக்கள் கடித்தால் கூட அதன் சிறப்பு அசிடைல்கொலின் ஏற்பிகள், நரம்புகள் மற்றும் தசைகளுடன் விஷம் இணைவதிலிருந்து தடுக்கின்றன.
- கீரியின் அசிடைல்கொலின் ஏற்பிகள், பாம்பு விஷத்திற்கு நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கின்றன.
- பாம்பின் விஷம் ஏனைய விலங்குகளுக்கு சாதாரணமாக செயல்படுவது போலக் கீரியிடம் செயல்படாமல் தோல்வியடைகிறது.
- எனவே, பாம்பின் முக்கிய ஆயுதமான அதன் விஷம் ஒரு கீரிக்கு எதிராக கிட்டத்தட்ட பயனற்றுப் போகிறது.
-

கீரி நாகத்தின் தாக்குதலை வெற்றிகரமாகத் திசைதிருப்பி, அதை எளிதாகக் கொன்றுவிடுகிறது

**யுவ்ராஜ்**

# உயிர் பூக்கள்

வேரோடு எனை பெயர்த்து
தருகிறேன் என்றேன்..
அப்பாவிடம் முறையாய் பேசி
கல்யாண நகைகளோடு வா
என்றாய்..

உன் சேவைக்கு வேலையை
விடுகிறேன் என்றேன்

சுய நம்பிக்கைக்கு
வேலை அவசியம்..
வீட்டு கடனுக்கு இரு
ஊதியம் தேவையென்றாய்..

வயிற்றில் சுமந்து வேலைக்கு
போக முடியாதென்றேன்..
எதிர்கொள்ள பயந்து
தள்ளிபோடுகிறாய்..

பேசுவது தவிர்த்து
மௌனம் அணிகிறாய்

ஞாயிற்றுக்கிழமை வீட்டில்தான்
என்கிறாய்
மற்ற நாட்களில் வெளியே
என்பதால்

வேலைகளை பகிர்ந்து கொள்ளலாம்
என்றால் சாப்பிடும் வேலையை
தெரிவு செய்கிறாய்

புத்தக வெளியீட்டுக்கு போகலாம்
என்றால் திரைப்படம்தான்
உனக்கு பிடிக்குமென்கிறாய்..

சுயமிருக்கிறது எனக்கும் என்று
எப்போது புரிந்து கொள்வாய்

முத்தம் கொடுக்க மட்டும்
இதழ்கள் அல்ல.. வாய் பேசவும்
பயன்படும் என்றால்
புரிந்து கொள்ள மறுக்கிறாய்

பூக்கள் உனக்கு பிடிக்குமென்கிறாய்
முட்களும் பூக்களில்தான்
இருக்கிறது

எனக் கற்று தர
வேண்டியிருக்கிறது..

**ச.ஆனந்த குமார்**



# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் - டிசம்பர் 2022
ஆண்டு 3 ▲ இதழ் 03

